OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
S. M. FERNANDO
580, HOSPITAL ROAD,
(Near Bank of Ceylon)
JAFFNA.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கண் வைத்திய நிபுணர்கள் சிபார்சு செய்யும் கண்ணாடிகளை சரியாக வழங்குபவர்கள்
எஸ். எம். பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கிக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 வைகாசி 29 ஞாயிற்றுக்கிழமை (12 06 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 196

# பேராசிரியர் துரைராசா காலமானார்
# மூன்று நாட்கள் துக்கம் அனுஷ்டிப்பு

## விடுதலைப்புலிகள் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ். பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் பிரபல கல்விமானுமாகிய பேராசிரியர் அழகையா துரைராசா தமது 58 ஆவது வயதில் நேற்று கொழும்பில் காலமானார் என்பதை மன வருத்தத்துடன் அறியத் தருகிறோம்.

மறைந்த பேராசிரியருக்கு அஞ்சலி செலுத்துமுகமாக மூன்று நாட்கள் துக்கதினங்களாக அனுஷ்டிக்கும்படி தமிழீழ மக்கள் அனைவரையும் விடுதலைப் புலிகள் இயக்கம் வேண்டியுள்ளது.

சிறந்த கல்விமானும் தேசப்பற்றுடன் செயல்பட்டு கல்வித் துறையின் மேம்பாட்டிற்கு அரும்பணியாற்றியவருமான பேராசிரியர் துரைராசா தமிழீழ தேசியத் தலைவர் திரு.வே. பிரபாகரனால் கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

வதிரியைப் பிறப்பிடமாகக் கொண்ட பேராசிரியர் துரைராசா உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆகியவற்றின் புகழ் பூத்த பழைய மாணவராவார்.

1957 ஜூனில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பட்டம் பெற்ற அவர் அங்கு கல்வித் துறையில் பல சாதனைகளை நிலைநாட்டியவர்.

பின் இலங்கைப் பல்கலைக் கழகங்களில் போதனாசிரியராகப் பணியாற்றிய அவர் 1961 இல் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றார்.

1962 இல் ஸ்ரீலங்கா பல்கலைக்கழக குடிசார் பொறியியல் விரிவுரையாளராகவும், 1970 இல் கனடாவில் வோட்டலோ பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகவும், 1971 இல்



பேராதனை பல்கலைக்கழகத்தில் பொறியியல் பேராசிரியராகவும், 1977 இல் பேராதனைப் பல்கலைக் கழக பொறியியல் பீடாதிபதியாகவும், 1978 இல் கனடா, பிரிட்டிஷ், காலம்பிய பல்கலைக் கழகங்களில் பேராசிரியராகவும், 1985 இல் மீண்டும் பேராதனை பல்கலைக்கழக பொறியியல் பீடாதிபதியாகவும், 1988 இல் திறந்த பல்கலைக் கழக பொறியியல் தொழில்நுட்ப பீடாதிபதியாகவும் பணியாற்றினார்.

1988ஆம் ஆண்டு மிக நெருக்கடியான காலகட்டத்தில் யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பொறுப்பை ஏற்றுக்கொண்ட அவர் சுமார் ஆறு ஆண்டுகள் அப்பணியை திறம்பட நிறைவேற்றி யாழ். பல்கலைக்கழகத்தின் தரத்தை உயர்த்தியதோடு ஈழத்தமிழரின் மனதிலும் நிலையான இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

தமது உடல் சுகவீனம் காரணமாக துணைவேந்தர் பதவியைத் துறந்த அவர் கடந்த சில மாதங்களாக கொழும்பில் திறந்த பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வந்தார்.

தலைவரின் பாராட்டு

துணைவேந்தர் துரைராசா

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஆழ்ந்த கவலை
## புலிகள் தெரிவிப்பு

பிரபல கல்விமானும் முன்னாள் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தருமான பேராசிரியர் அ. துரைராசா அவர்கள் இயற்கை எய்தியதையிட்டு விடுதலைப் புலிகள் இயக்கம் தனது ஆழ்ந்த கவலையையும் வேதனையையும் வெளியிட்டிருக்கிறது.

இது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் நேற்று விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:-

பேராசிரியர் துரைராசாவின் மறைவுக்கு அஞ்சலி செலுத்

(6ஆம் பக்கம் பார்க்க)

## நாளை வரை பூதவுடல் அஞ்சலிக்காக கொழும்பில்

பேராசிரியர் துரைராசாவின் பூதவுடல் கொழும்பில் மக்கள் அஞ்சலிக்காக நாளை காலை வரை வைக்கப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நாளை காலை 7 மணி வரை பொரளை ருகுணு கனா மாவத்தை, பிளக்றோட். 10/2 இலக்க இல்லத்திலும் —

பின்னர் அன்றைய தினம் காலை 9-30 மணிவரை கொழும்பு திறந்த பல்கலைக்கழகத்திலும் அவரின் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும்.

## செவ்வாயன்று பூதவுடல் யாழ்ப்பாணம் வந்து சேரும்

பேராசிரியர் துரைராசாவின் பூதவுடல் நாளைகாலை 9-30 மணிவரை கொழும்பில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப் பட்டபின் இறுதிச் சடங்குகளுக்காக யாழ்ப்பாணத்துக்கு கொண்டு செல்லப்படும் என கொழும்பில் நேற்று அறிவிக்கப் பட்டது.

பூதவுடல் அனேகமாக நாளை மறுதினம் (செவ்வாய்க் கிழமை) யாழ்ப்பாணம் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வதிரியில் உள்ள அவரது இல்லத்திலும், யாழ். பல்கலைக்கழகத்திலும் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப் படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## குருநகரில் நேற்று பயங்கரம்

# அதிகாலை நித்திரைப் பாயிலிருந்த மூவர் படையினரின் ஷெல்லுக்கு இரையாகினர்

### இளம்தாய், இரு சிறுமிகள் பலி; மற்றும் ஆறுபேர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜூன் 12

மண்டைதீவில் நிலை கொண்டுள்ள படையினர் நேற்று அதிகாலை 1.05 மணியளவில் யாழ். நகர் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி நடத்திய — கண்மூடித்தனமான — ஷெல் தாக்குதலில் குருநகரில் வீடொன்றில் உறங்கிக்கொண்டிருந்த — ஒரே குடும்பத்தைச் சேர்ந்த — மூவர் உயிரிழந்தனர், ஆறு பேர் படுகாயமடைந்தனர்.

அவர்களின் வீடு சேதமுற்றது.

குருநகர் தண்ணீர்த்தாங்கி வீதிப்பகுதியில் விழுந்த ஷெல்லுக்கே அப்பகுதி வீடொன்றின் விறாந்தையில் உறங்கிக் கொண்டிருந்த குடும்பம் ஒன்று இரையானது.

வீட்டுக் கூரையில் வெடித்துச் சிதறிய ஷெல் விழுந்து இளம் தாய் ஒருவரும் மற்றும் இரு சிறுமிகளும் உயிரிழந்தனர் அதே வீட்டில் வசித்த மற்றும் ஆறு பேர் காயமுற்றனர்.

சேகர் நிரோஜா (வயது 4) என்ற சிறுமி அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

அவரது சகோதரியான சேகர் உஷாநந்தினி (சிந்து-வயது 8) என்ற சிறுமி யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப் பட்டு அங்கு உயிரிழந்தார்.

உயிரிழந்த குழந்தைகளின் தந்தை ஈரான சிலுவை சேகரின் சகோதரி றோகினி கலிஸ்ரா சுரேஷ் (அகல்யா - வயது 18) என்ற இளம் தாயும் மார்புப் பகுதியிலும் தலையிலும் படுகாயமுற்ற நிலையில் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டு அங்கு உயிரிழந்தார்.

சிலுவை சேகரும் (வயது 32) சிலுவை சேகரின் பெற்றோர்களான ஜோசெப் சிலுவை (வயது 65), சிலுவை தேக்கிளம்மா (பாக்கியம் -- வயது 65) ஆகியோரும் -

சேகரின் மற்றொரு சகோதரியான சிலுவை விஜியும் (வயது 16) -

சேகரின் மருமக்களும், உயிரிழந்த றோகினி கலிஸ்ரா சுரேஷின் பிள்ளைகளுமான சுரேஷ் நரேஷ் (வயது 4), சுரேஷ் தினேஷ் (வயது 2) ஆகியோருமே இச்சம்பவத்தில் படுகாயமடைந்துள்ளனர். இவர்கள் தற்போது யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்

(6ஆம் பக்கம் பார்க்க)

## எம்.பி. பதவி துறந்த அமிட்டுக்கு ரூ.70 ஆயிரம் சம்பளத்தில் பதவி

### இது லஞ்சம் இல்லையா என்று கேட்கிறார் சு.க எம்.பி

கொழும்பு, ஜூன் 12

காமினி திஸநாயகா எம்.பியாவதற்காக பதவி விலகிய எம். எச். அமிட் மாதம் 70 ஆயிரம் ரூபா சம்பளம் பெறும் தலைவராக அமைப்பு ஒன்றிற்கு நியமிக்கப்பட்டுள்ளார். இது லஞ்சம் இல்லையா? இப் பணம் பொதுமக்களுடையது அல்லவா!

சுதந்திரக் கட்சி எம். பி. நிமால் சிறிபால டி சில்வா அவையில் நாடாளுமன்றத்தில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:-

அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகளைக் குறைக்கும்படி முன்னர் நாம் கேட்டபோது, யுத்தத்துக்கு பணம் தேவைப்படுகிறது, விலைகளைக் குறைக்க முடியாது என்று அரசு தெரிவித்தது.

ஆனால் இப்போது உணவுப் பொருள்களின் விலைகளைக் குறைத்துள்ளீர்கள். யுத்தத்தை நிறுத்தி விட்டீர்களா? யுத்தச் செலவினத்தைக் குறைத்து விட்டீர்களா? இப்படி அவர் கேட்டார். (இ-எ)

## சிறிசேனவுக்கும் உயர் பதவி

கொழும்பு, ஜூன் 12

பதவி விலகிய ஐ. தே. க. தேசிய பட்டியல் எம். பி. ஆர். ஏ. டி. சிறிசேன தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபையின் உபதலைவராக நியமிக்கப்பட்டார். (இ-எ)

### முச்சந்தி முரளி



...கிடைத்த பரிசுகள் பாருங்கோ ...

## அரசுக்கு பலகோடி கடன்:

## ஆளுநர் பதவி வகிக்க சுவாமிநாதன் தகுதியா?

### கம்பஹா எம்.பி. கேள்வி

கொழும்பு, ஜூன் 12

மேல் மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்ட சட்டத்தரணி டி. எம். சுவாமிநாதன் 'ஆறுமுகம் சகோதரர்கள்' என்ற நிறுவனத்தின் பணிப்பாளர் ஆவார். அரசிடமிருந்து பல பொருளாதாரச் சலுகைகளைப் பெற்றுள்ள 'ஆறுமுகம் சகோதரர்கள்' நிறுவனத்தின் பணிப்பாளரை மேல் மாகாண ஆளுநராக நியமித்தது உயர்மட்ட நிர்வாகத்துக்கு உகந்தது அல்ல.

கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே இவ்வாறு தெரிவித்துள்ளதாக 'வெரித்தாஸ்' அறிவித்தது.

கோடிக் கணக்கில் அரசுக்கு பணம் செலுத்துவதற்கு ஒப்பந்தத்தின் மூலம் கட்டுப்பாடுள்ள நிறுவனம் ஒன்றின் பணிப்பாளர் மாகாண ஆளுநராக நியமிப்பட்டது ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைக்கு முரணானது என்றும் அவர் கூறினார்.

100கோடிக்கு அதிகம் பெறுமதிமிக்க ஹிங்குராணை சீனி ஆலையை சுமார் 13 கோடி ரூபாவுக்கு அரசு அண்மையில் 'ஆறுமுகம் சகோதரர்கள்' நிறுவனத்துக்கு விற்பனை செய்துள்ளது.

30 ஆயிரம் ஏக்கர் கரும்புத் தோட்டத்துடனான இச்சீனி ஆலையை 'ஆறுமுகம் சகோதரர்கள்' நிறுவனம் இரண்டரைக் கோடி ரூபா பணத்தை அரசுக்குச் செலுத்தி வாங்கியுள்ளது. எஞ்சியுள்ள பத்தரைக் கோடி ரூபாவை செலுத்துவதற்கு அரசு இந்நிறுவனத்துக்கு பல சலுகைகளைச்

(6ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக காங். தலைவர்கள் நரசிம்மராவால் அவமதிப்பு

### இடைநடுவில் சென்னை திரும்பினர்

புதுடில்லியில் நடைபெறும் அனைத்திந்திய காங்கிரஸின் கமிட்டிக் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்ற தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தியும், மாநில காங்கிரஸின் மூத்த தலைவர் ஜி. கே. மூப்பனாரும் இடைநடுவில் சென்னை திரும்பிவிட்டனர்.

பிரதமர் நரசிம்மராவ் தமக்கு உரிய மதிப்பு அளிக்கத் தவறிவிட்டார் என்று இவர்கள் குற்றஞ்சாட்டி உள்ளனர்.

காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் கலந்துகொள்ள புதுடில்லி சென்ற மாநில காங்கிரஸ் பிரமுகர்கள் அனைவரையும் வழமைபோல் நரசிம்மராவ் இம்முறையும் சந்தித்துப் பேசினார்.

ஆனால் இம்முறை தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்கள் எவரும் அழைக்கப்படவில்லை.

இதனாலேயே இவர்கள் இருவரும் இடைநடுவில் நேற்றுக் காலை சென்னை திரும்பினர் (இ-க)

## அம்பாறை பகுதியில் இரவுநேர ஊரடங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 12

அம்பாறை தம்புலுவில பகுதியிலும் மற்றும் சில பகுதியிலும் ஸ்ரீலங்கா படையினர் இரவில் உத்தியோகப்பற்றற்ற ஊரடங்கு உத்தரவை பிறப்பித்துள்ளனர்.

தினமும் 6 மணிக்கு பின்னர் எக்காரணம் கொண்டும் வீட்டுக்கு வெளியே வரக்கூடாது என படையினர் கடுமையான உத்தரவை பிறப்பித்துள்ளனர்.

உத்தரவை மீறி வெளியே வருவோர் சுடப்படுவர் என படையினர் எச்சரித்துள்ளனர்.

முன்னர் நோய் மற்றும் அவசர தேவைகள் ஏற்படின் பொது மக்கள் கைவிளக்குகளின் உதவியுடன் படை முகாம்களுக்கு சென்று அனுமதி பெறமுடியும்.

ஆனால் இப்போது மாலை 6 மணிக்கு பின்னர் எக்காரணம் கொண்டும் எவரும் வீடுகளுக்கு வெளியே செல்லக் கூடாது என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (இ-162)

## கொழும்பில் பட்டப்பகலில் ரூ. 11லட்சம் கொள்ளை

கொழும்பு, ஜூன் 12

கொழும்பில் நேற்று பட்டப்பகலில் பதினொரு லட்சம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டது.

கொள்ளுப்பிட்டி அப்துல் காதர் மாவத்தையில் இச்சம்பவம் இடம்பெற்றது.

தனியார் கைத்தொழில் நிறுவனம் ஒன்றைச் சேர்ந்த அதிகாரிகள் இருவர் பணத்துடன் பஜிரோ வாகனத்தில் சென்று கொண்டிருந்த சமயம் இச்சம்பவம் இடம்பெற்றது.

இவர்களைப் பின் தொடர்ந்து நிஷான் வாகனம் ஒன்றில் வந்த நால்வர் துப்பாக்கியைக் காட்டி அதிகாரிகளைப் பயமுறுத்தி விட்டு பணத்தை அபகரித்தனர்.

''பஜிரோ'' வாகனத்தின் சில்லுகளுக்குச் சுட்டுவிட்டு தாம் வந்த வாகனத்தில் அவர்கள் தப்பிச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-6)

## பொலீஸ் எதிர்ப்புக்கு மத்தியில் வவுனியாவில் வீதித்தடை நீக்கம்

### புளொட் உறுப்பினர்களுக்கு விசேட "பாஸ்"

கொழும்பு, ஜூன் 12

வவுனியா நகரில் காலை 6 மணி தொடக்கம் இரவு 10 மணி வரை பொலீஸார் அமுல் நடத்தி வந்த வீதித்தடை விலக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்றாம் திகதி வைரவப்புளியங்குளத்தில் ஆயுதம் தரித்த புளொட் உறுப்பினர்கள் பொலீஸ் சப்இன்ஸ்பெக்டர் ஒருவரைத் தடுத்து வைக்க எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டதை தொடர்ந்து வீதித்தடை நீக்கப்பட்டிருப்பது பொலீஸ் வட்டாரங்களில் பலத்த சர்ச்சையை ஏற்படுத்தி இருப்பதாக ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

வவுனியாவில் நிலைகொண்டுள்ள சில பொலீஸ் அதிகாரிகளின் எதிர்ப்புக்கு மத்தியிலும் உயர் அதிகாரிகள் வீதித்தடையை நீக்குவது என்ற முடிவை கடந்த செவ்வாய்க்கிழமை எடுத்தனர் என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிய உத்தரவினால் கோவில்குளம், குருமன்காடு, பிரவுன்ஸ் கம்பெனி கட்டடம் மற்றும் வைரவப்புளியங்குளம் ஆகிய இடங்களில் உள்ள பொலீஸ் சோதனை நிலையங்கள் செயல் இழந்துள்ளன.

வீதித்தடைச் சோதனைகளை இரவு 10 மணி தொடக்கம் காலை 6 மணிவரை மட்டுமே அமுல்நடத்த வேண்டும் என்றும் பொலீஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த மூன்றாம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தின் போது பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் இரண்டு ஆயுதங்களை புளொட் உறுப்பினர்கள் இராணுவத்தினரிடம் கையளித்தனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய அறிவித்தல்

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

## யாழ். மாவட்டம்

யாழ். பல்கலைக் கழக முன்னைநாள் உபவேந்தர் கலாநிதி துரைராசா அவர்களின் மறைவையொட்டி இன்று 12 - 06 - 1994 ஞாயிற்றுக்கிழமை அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களையும் மூடி அன்னாருக்கு இதய அஞ்சலியை செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறீர்கள்.

பொதுச் செயலாளர்
யாழ். மாவட்டம்

[சி/8455]

# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 13 — 06 — 1939

மறைவு: 18 — 05 — 1988

## அமரர் கந்தையா சங்கரசிவம்

(ஆசிரியர், மிருதங்க வித்துவான்)

அன்பின் பிறப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய் எமது குடும்ப ஒளிவிளக்காய்த் திகழ்ந்த எமது வளமான வாழ்வுக்கு வித்திட்டவரே! உங்கள் நீங்காத நினைவோடு வாழும்.

அன்பு மனைவி, மகன்.

கொம்மந்தறை,
வல்வெட்டித்துறை. (31869)

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 29 — 11 — 1945

மறைவு: 02 — 06 — 1984

## அமரர் மார்க்கண்டு பாலசுந்தரம்

(பிரபல வர்த்தகர் - சுன்னாகம்)

திதி. 12 - 06 - 1994

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவில் வாழும்
மனைவி, பிள்ளைகள்.

"பழமுதிர்சோலை"
ஏழாலை மேற்கு,
சும்புவத்தை. (7235)

# ஓராண்டு நினைவஞ்சலி



## இராஜகோபால் பிரேமானந்

தரையில் தவழ்ந்தது: 28 — 06 — 1968
கடலில் சங்கமித்தது: 23 — 05 — 1993

திதி: **12 – 06 – 1994**

ஆழ் கடலில் ஆகுதியாகி
ஆண்டொன்று போனதையா
பாழும் மனம் இங்கே
பரிதவித்து நிற்குதையா
செய்தி கேட்ட நாள்முதலாய்
நிம்மதி கெட்டுப் போனதையா
நீ வருவாய் என்று தினம்
மனம் எண்ணி வாழுதையா
அன்னாரின் திடீர் மறைவினால் தாங்கொணாத் துயருறும்!

அப்பா, அம்மா, தம்பிமார்,
தங்கைமார், உற்றார், உறவினர்.

இல. 81, காரைக்காடு ஒழுங்கை,
வண். மேற்கு,
யாழ்ப்பாணம், [81867]

# தங்கநகை மாடிமனை தேடாதே!
# நீ மாலையிட சீதனத்தைக் கேளாதே!

வலி - கிழக்கு பிரதேச சபை
எல்லைக்குட்பட்ட

## மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி கடைகளுக்கான
## மீளக் கேள்வி அறிவித்தல் - 1994

கீழ்க் காணும் இறைச்சிக் கடைகளுக்கான கேள்விகள் மீளக் கோரப்படுகிறது. மேலதிக விபரங்களை அலுவலக நாட்களில் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும். கேள்விப்பத்திரங்கள் 13 - 06 - 1994 ஆம் திகதி தொடக்கம் 20 - 06 - 1994 ஆம் திகதி நண்பகல் 12-00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். அன்றைய தினம் பிற்பகல் 2-00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும்.

1. நீர்வேலி மாட்டிறைச்சிக் கடை
2. உரும்பிராய் ஊரெழு ஆட்டிறைச்சிக் கடை
3. இருபாலை ஆட்டிறைச்சிக் கடை
4. கோப்பாய் வடக்கு ஆட்டிறைச்சிக் கடை

கதிரவேலு கேதீஸ்வரன்,
விசேட ஆணையாளர்,
வலி. கிழக்கு பிரதேச சபை.

வலி. கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி.
1994 - 06 - 10 [சி-8443]

## நீர்ப்பாசன தொழில்நுட்பவியலாளர்கள்
## உடன் தேவை

தாயக பொருண்மியத்தை வளர்க்கும் நோக்குடன் நாம் துரித நீர்வள மேம்பாட்டுத் திட்டத்தை அமுலாக்க உள்ளோம். இதை இனிது நிறைவேற்ற எமக்கு பின்வரும் அனுபவசாலிகள் உடன் தேவைப்படுகின்றனர்.

நீர்ப்பாசன பொறியியலாளர்கள்
நீர்ப்பாசன தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்
நீர்ப்பாசன தொழில் மேற்பார்வையாளர்கள்
நீர்ப்பாசன படவரைஞர்கள்

தகைமையுடையவர்களுக்கு தகுந்த சம்பளம் வழங்கப்படும். பெருநிலப்பரப்பில் வேலை செய்ய தெரிவு செய்யப்படுபவர்களுக்கு மேலதிக ஊக்குவிப்பு பணமும் கொடுக்கப்படும்.

உங்கள் அனுபவம் பற்றிய சான்றிதழ்களுடன்
எதிர்வரும் வியாழன் (16-06-94)
அல்லது
வெள்ளி (17 - 06 - 94)
காலை 10 மணிக்கு
கீழ் உள்ள விலாசத்தில் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

உட்கட்டுமானப் பகுதி,
**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்**
இல, 10, செம்பியன் வீதி,
கொக்குவில். [சி-8447]

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் த. செல்வத்துரை

(சட்டத்தரணி)

மலர்வு: 03 - 09 - 1923

உதிர்வு: 03 — 07 — 1992

நேர்மையின் சிகரமாய் அகிம்சையின் நண்பனாய் இவ்வுலகில் வாழ்ந்து தெய்வீக ஈடேற்றம் பெற்ற தெய்வமே நீங்கள் காட்டிய அன்பும், கனிவும், மனிதர்க்குரிய வாழ்க்கைப் பாடங்களாகும்.

நீங்கள் மறைந்து ஆண்டுகள் இரண்டாயினும் உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சில் பசுமையாகவே என்றும் இருக்கும்.

மனைவி, குடும்பத்தினர்

கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (81871)

## புலிகளின் குரல் வானொலியில்

12 - 06 - 1994
ஞாயிறு இரவு

- ★ 8-01 — இசையரங்கம் — நிகழ்ச்சியில் பாடுபவர் சாரதா சச்சிதானந்தம்.
- ★ 8-20 — சிறப்பு நிகழ்ச்சி "வரலாற்றுப்பாதையில் சிறிலங்கா அரசினை இனங்காட்டிக் கொண்ட கொக்கட்டிச்சோலை படுகொலைகள்"
- ★ 8 - 30 — செய்திகள்
- ★ 8-40 — தொடர் நாடகம் இலங்கை மண் 27 ஆம் அங்கம்

13 - 06 - 1994
திங்கள் காலை

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — மணியாரம்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — தாயகப் பாடல்கள்.

## இன்று

தமிழ் சோதிடர் ஒன்றியத்தின் வாராந்த இலவச வகுப்புக்களும், ஆய்வரங்கும் இன்று ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு ஆரியகுளம் சந்தியிலுள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றிய பணிமனையில் நடைபெறும்.

இன்றைய சோதிட வகுப்பில் தேசாயுத்தி கணிதம் பற்றிய விரிவுரையை திரு. கே. சாம்பசிவமும், "மனோகாரன் சந்திரன்" என்ற பொருளில் ஐயா. சச்சிதானந்தனும், சந்திரயோகம் பற்றி திரு. பி. சந்திரசேகரும், சந்திர நோய் பரிகாரம் பற்றி திரு. கே. தியாகராசாவும் ஆய்வுரை வழங்குவர். (ஒ)

★ ★ ★

தென்மராட்சி, ஜூன் 12
கைதடி மேற்கு சரஸ்வதி கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால், அண்மையில் வெளியாகிய பரீட்சை முடிவுகளில் சித்தியடைந்த இப்பகுதி மாணவர்களை — பாராட்டி பரிசளிக்கும் வைபவம் இன்று சங்க மண்டபத்தில் தலைவர் திரு. ஆ. செல்லத்துரை தலைமையில் நடைபெறும். சாவகச்சேரி — பளை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் திரு. வே. கிருஷ்ணன் முதன்மை விருந்தினராக கலந்து கொள்வார். (உ-117)

★ ★ ★

சாவகச்சேரி பிராந்திய தொலைக் கல்வி நிலையத்தில் கல்வி பயிலும் ஆசிரிய மாணவர்களையும் போதனாசிரியர்களையும் இன்று காலை 8 30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ள கற்கை வட்டத்திற்கு சமூகமளிக்குமாறு சிரேஷ்ட போதனாசிரியர் திரு. மூ. யோகராசா கேட்டுள்ளார். (உ-31)

★ ★ ★

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழக ஆதரவில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நீர்வேலி முற்ற வெளி மைதானத்தில் மாட்டு வண்டிச் சவாரி நடைபெறவுள்ளது.

ஏ. பி. சி. என மூன்று பிரிவாக நடைபெறும் இப்போட்டிக்குப் பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (க-110)

★ ★ ★

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க ஊர்காவற்றுறைப் பிரிவின் தொண்டர் விழா இன்று காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (க-117)

★ ★ ★

வலிகாமம் வடக்கு பிரதேச செயலகத்தினர் போஷாக்கு வாரத்தை முன்னிட்டு தமது பிரதேசப் பாடசாலைகளுக்கிடையே நடத்தும் பேச்சு, பாட்டு, கட்டுரைப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மகாஜனக் கல்லூரியில் நடைபெறும். (க)

## AL/96

சனி, ஞாயிறு
11. 00 மணி
நாடகமும்
அரங்கியலும்
திரு. திருச்செல்வம்
12. 00 மணி
தமிழ்
திரு. திருஞானம்
ஆரம்பம்: 12-06-1994

**BOND**
**கல்வி நிறுவனம்**
யாழ்ப்பாணம். [7446]

யாழ். பல்கலைக் கழக
முன்னைநாள் உபவேந்தர்

## கலாநிதி துரைராசா

அவர்களுக்கு

# எமது இதய அஞ்சலி

- ★ எம் பல்கலைக் கழகத்தின்
தன்னிகரற்ற துணை வேந்தராய்
எம் மாணவ மணிகளின்
உயர் கல்வி பரந்து
விரிந்து மேன்மையுற
ஓய்வு உறக்கமின்றித்
திரிகரண சுத்தியுடன்
உழைத்த உத்தமனே!
உயர்ந்தவனே! உபவேந்தே
உம் மறைவால் பெரிதும் நலிந்துள்ளோம்.
- ★ சிந்தை குளிரச் சிரித்தொழுகும்
நின் முகத்தை எந்த நாள் காண்போமினி
- ★ எம் நெஞ்சிருக்கும் வரை
நினைவில் இருப்பீர் ஐயா!
- ★ அன்னாரின் பாரியார் அவர்களுக்கும்
அருந்தவப் புத்திரர்களுக்கும் எமது
உளம் நெகிழ் அனுதாபங்கள்!

**தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்**
யாழ். மாவட்டம்
(சி/8454)

யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

## பழைய மாணவர் சங்கப் போஷகராக விளங்கிய

பேராசான்

## அழகையா துரைராசா

அவர்களின்

## பிரிவாற்றாமையால் வெளிவரும்

# சங்கத்தின் இரங்கல்

எங்கள் துரையென ஊர் கொண்டாடும்
மங்காப் புகழினர் மாண்புறு கல்வியால்
தழைத்திய சால்பினால் தண்ணொளி முகத்தினால்
தங்கமாய் மிளிர்ந்திட்ட எங்களின் வேந்தரே,
அண்ணலே!
உன் இதயம் ஓய்ந்து செய்தியை
உன்னை அறிந்த இதயங்கள் ஏற்க மறுக்கின்றன
எங்களின் மத்தியிலே
உனது கம்பீரமான நடையோட்டம்
அது இனி இல்லையா?
தெய்வீகமாய் மலருகின்ற குழந்தை முறுவல்
அது இனி இல்லையா?
சொல்லைத் தெளிவோடு,
இயல்பாய், எளிமையாய்
அன்பாய், நிகழ்கின்ற
பிடிவாதமில்லாத உரையாடல்
அது இனி இல்லையா?
இரத்த பந்தம் தசையை உலுக்கும் என்பார்கள்
ஆனால் உனது பிரிவு
இரத்த பந்தத்திற்கு அப்பாற்பட்டு
எங்கள் எல்லோரின் இதயங்களையும்
தசைகளையும் அசைக்கிறதே அது ஏன்?
நீ மேதை என்பதனாலா? இல்லையே
உபவேந்தர் என்பதனாலா? இல்லை
சமூக மத்தியிலே ஒரு பிரமுகர் என்பதனாலா
இல்லை, இல்லை.
இந்தப் போர்வைகளையெல்லாம் உதறிவிட்டு,
ஓர் உண்மையான மனிதனாக,
எளிமையும், அன்பும் நிறைந்த
வேடங்கள் இல்லாத மனிதனாக
எங்களிடையே வாழ்ந்தாயே
அந்த உறவுதான் எங்களை உலுக்குகிறது.
உனது விழிகள் மூடிவிட்டன,
உலகம் ஒரு மேதையை இழந்தது.
தமிழீழம் ஒரு வழி காட்டியை இழந்தது.
பல்கலைக்கழகம் ஒரு வேந்தனை இழந்தது.
மாணவருலகம் பேராசானை இழந்தது.
சமூகம் அரிய மனிதனை இழந்தது,
நாங்கள் காப்பாளரை இழந்தோம்,
எங்கள் ஊர் துரையை இழந்தது
உனது குடும்பம் தலைவனை இழந்தது.
அண்ணலே! உனது வாழ்வும், பிரிவும்
எழுத்துகளுக்கப்பாற்பட்டது:
எங்கள் கொடுப்பனவு இவ்வளவே ஆனது
எங்களிடம் நீ காட்டிய பண்பிற்காகப், பரிவிற்காக
தந்த துணிவிற்காக, ஊக்கத்திற்காக
இறுதியாக எங்கள் நன்றிகள்
ஓ! நீ கனிவாகச் சிரிக்கிறாய்
"கர்மயோகம் — அது தானே எங்கள் வாழ்க்கைத்தத்துவம்"
என்று கதைகளினிடையே நீ சொல்லியதுண்டு
அவ்வழியைத் தொடர
எங்களுக்கு வழிகாட்டுவாயாக
நின் ஆத்மாவின் தெய்வீக ஒளியை
நின்விடத்தில் தரிசித்தோம்.
அது சாந்தி பெறுவது இயற்கை
அகரம் கற்ற நின் கல்லூரியின்
சோதரிகள் பிரியா விடை தருகிறோம்.

அன்னாரை இழந்து துன்பமுறும் அருமை மனைவி
அன்புக் குழந்தைகள், உடன் பிறந்தோர்
அனைவர்க்கும் எங்கள் சங்கத்தின்
ஆழ்ந்த அனுதாபங்கள் உரியன.

பழைய மாணவர் சங்கம்
யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
[31873]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடகொரிய அணுஆலை விவகாரத்தால் கொரிய தீபகற்பத்தில் நெருக்கடி நிலை!

வடகொரியாவின் அணுசக்தி உற்பத்தி ஆலை விவகாரம் வடகொரியாவுக்கும் தென்கொரியாவுக்கும் இடையில் முறுகல் நிலையை ஏற்படுத்தி இருக்கிறது.

இரு கொரியாக்களையும் பிரிக்கும் யுத்த சூன்யப் பிரதேசத்தில் 1953 ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதல் தடவையாக பெரும் பதற்ற நிலை உருவாகி வருகிறது. போர்ப் பீதி அப்பிராந்தியத்தை சூழ்ந்து கொண்டிருக்கிறது.

எந்த ஒரு சிறிய சம்பவமும் பெரும் யுத்தமாக உருவெடுக்கலாம் என அவதானிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

வடகொரியா தனது படைகளை கனரக ஆயுதங்களுடன் தென்கொரிய எல்லையை நோக்கி நகர்த்தி இருப்பது நிலைமையை மேலும்

**வெளி உலகம்**

மோசமாக்கி உள்ளது எனலாம்.

வடகொரியப் படைகளில் மூன்றில் இரண்டு பங்கினர் யுத்த சூன்யப் பகுதியில் இருந்து 160 கிலோ மீற்றர் தொலைவில் தற்போது நிலை கொண்டுள்ளனர்.

யுத்தம் மூளுமானால் இப்படைகள் ஒரு மணித்தியாலத்துக்குள் யுத்த சூன்யப் பகுதியை அடைந்துவிடும்.

வடகொரியா தன்னிடம் உள்ள அணுசக்தி உற்பத்தி ஆலைகளை சர்வதேச அணுசக்தி ஏஜென்ஸியின் பிரதிநிதிகள் பார்வையிட அனுமதி மறுத்து வருகிறது.

இதுவே இன்றைய நெருக்கடிக்குக் காரணம் ஆகும்.

**அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தம்**

உலகில் பேரழிவுகளை ஏற்படுத்தக்கூடிய அணு ஆயுத உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் அமெரிக்கா — சோவியத் யூனியன் உட்பட உலக நாடுகளினால் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் (Nuclear Non Proliferation Treaty) என அழைக்கப்படும் அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தம் ஆகும்.

இந்த ஒப்பந்தத்தை அமுல் செய்வதற்கு வசதியாக ஐக்கிய நாடுகள் சபையின் ஓர் அமைப்பு நிறுவனமான சர்வதேச அணு சக்தி ஏஜென்ஸியுடனும் (International Atomic-Energy Agency) இந்த நாடுகள் ஒப்பந்தம் செய்திருந்தன.

சர்வதேச அணுசக்தி ஏஜென்ஸி உறுப்பினர்கள் விரும்பிய நேரத்தில் எந்த ஒரு நாட்டின் அணுசக்தி உற்பத்தி ஆலைகளையும் பார்வையிட ஒப்பந்தம் வழி வகுத்திருந்தது.

அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் 1985 ஆம் ஆண்டு வடகொரியாவும் கையெழுத்திட்டிருந்தது.

வடகொரியா ரகசியமாக அணுக்குண்டுகளைத் தயாரிப்பதாக வதந்திகள் வெளிவந்ததால் வடகொரியாவின் அணுசக்தி உற்பத்தி ஆலைகளை பார்வையிட வேண்டிய அவசியம் சர்வதேச அணுசக்தி ஏஜென்ஸிக்கு ஏற்பட்டது.

இந்த நிலையில் 1993 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வடகொரியா விடுத்த ஓர் அறிவிப்பு வடகொரியா மீதான சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தியது.

அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் இருந்து தான் விலகப் போவதாக வடகொரியா அறிவித்தது.

அதே சமயம் தனது நாட்டில் உள்ள அணு சக்தி உற்பத்தி ஆலைகளையும் சர்வதேச அணுசக்தி ஏஜென்ஸி உறுப்பினர்களுக்கு காண்பிக்கவும் வடகொரியா மறுத்திருந்தது. பதினொரு மாதகால இழுபறிக்குப் பின்னர் சர்வதேச அணு சக்தி ஏஜென்ஸி உறுப்பினர்கள் வடகொரியாவின் சில அணுசக்தி உற்பத்தி ஆலைகளை மட்டும் பார்வையிட அனுமதிக்கப்பட்டனர்.

சில ஆலைகளில் இருந்து அணுக்குண்டு உற்பத்திக்குத் தேவையான புளூட்டோனியத்தை (Plutonium) உற்பத்தி செய்யக் கூடிய ரேடியோ கதிரியக்க எரிபொருள் (Radio Active Fuel) எடுக்கப்பட்டிருப்பது சர்வதேச அணுசக்தி ஏஜென்ஸி உறுப்பினர்களினால் கண்டுபிடிக்கப்பட்டது.

ஆகவேதான் ஏற்கனவே கையெழுத்திட்ட அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தை மீறி வடகொரியா அணுக்குண்டுகளை உற்பத்தி செய்கிறது என்பது அமெரிக்காவின் குற்றச்சாட்டு ஆகும்.

## எந்த ஒரு சிறிய சம்பவமும் பெரும் யுத்தமாக உருவெடுக்கும் ஆபத்து

**பணிய வைக்க இரு வழிகள்**

வடகொரியாவை பணிய வைப்பதற்கு அமெரிக்காவிடம் தற்போது இரு வழிகளே உள்ளன. ஒன்று வடகொரியா மீது தடைகளை (Sanctions) விதிப்பது.

மற்றது வடகொரியாவை யுத்தத்துக்கு இழுத்து அதனை தாக்கி அழிப்பது.

வடகொரியா மீது தடை விதிக்கப்படுவதை சீனா கடுமையாக எதிர்த்து வருகிறது.

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் இது சம்பந்தமான தீர்மானம் வருமானால் தனது 'வீட்டோ' அதிகாரத்தைப் பயன்படுத்தப் போவதாக சீனா எச்சரித்து வருகிறது.

அதே சமயம் ரஷ்யாவும் வடகொரியா மீதான தடையை எதிர்த்து வருகிறது.

தடைவிதிக்க முன்னர் சர்வதேச மாநாடு ஒன்றைக்கூட்டி வடகொரியாவின் அணு ஆயுத உற்பத்திப் பிரச்சினையை விவாதிக்க வேண்டும் என்று ரஷ்யா கோருகிறது.

தனது மீதான எந்த ஒரு தடையையும் யுத்த பிரகடனமாக கருதி பதிலடி கொடுக்கப் போவதாக வடகொரியா மிரட்டி வருகிறது.

1950 – 53 கொரிய யுத்தத்தில் ஏற்பட்ட படிப்பினை காரணமாக வடகொரியாவை பொருளாதார - இராணுவ அழுத்தங்கள் மூலம் பணிய வைக்கவே அமெரிக்கா விரும்புவதாகத் தெரிகிறது.

கொரியாவில் மீண்டும் யுத்தம் வெடிக்குமானால் அமெரிக்க நேச நாடான ஜப்பானுக்கும் ஆபத்து ஏற்படலாம். 600 மைல்கள் தூரம் செல்லக்கூடிய, அதாவது ஜப்பானைத் தாக்கக் கூடிய ஏவுகணைகளை வடகொரியா தயாரித்து வைத்துள்ளது.

வடகொரியாவின் அணு ஆயுத உற்பத்திப் பிரச்சினை தொடர்பாக அமெரிக்கா வட

### வட - தென் கொரியா அமெரிக்க படைப்பலம்

பிரச்சினையில் நேரடியாகச் சம்பந்தப்பட்டுள்ள வடகொரியாவின் ராணுவ பலமும், தென்கொரியாவின் ராணுவ பலமும தென்கொரியாவில் உள்ள புசான் (Pusan) அமெரிக்க ராணுவத்தளத்தில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படைகளின் பலமும் கீழே தரப்பட்டுள்ளன. தென்கொரியாவைவிட வடகொரியா ராணுவ ரீதியில் பலம் வாய்ந்தது. கொரியாவில் யுத்தம் மூண்டால் தென் கொரியாவில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படைகளும் யுத்தத்தில் இழுக்கப்படலாம்.

**வடகொரியா**

- ★ முழுப்படையினர் — 11, 27, 000.
- ★ பிரதான யுத்த டாங்கிகள் — 3,700
- ★ கவசவாகனங்கள் — 2, 500
- ★ பீரங்கிகள், றொக்கெட் லோஞ்சர்கள் — 9,080
- ★ விமான எதிர்ப்பு துப்பாக்கிகள் ஏவுகணைகள் 18, 800
- ★ சண்டை விமானங்கள் — 780

**தென்கொரியா**

- ★ முழுப்படையினர் — 6,33 000
- ★ பிரதான யுத்த டாங்கிகள் — 1,800
- ★ கவச வாகனங்கள் — 3,550
- ★ பீரங்கிகள், றொக்கெட் லோஞ்சர்கள் — 4,540
- ★ விமான எதிர்ப்பு துப்பாக்கிகள், ஏவுகணைகள் — 1,450
- ★ சண்டை விமானங்கள் — 600

**அமெரிக்கா**

- ★ முழுப்படையினர் — 34 830
- ★ பிரதான யுத்த டாங்கிகள் — 100
- ★ கவசவாகனங்கள் — 100
- ★ பீரங்கிகள், றொக்கெட் லோஞ்சர்கள் — 100
- ★ விமான எதிர்ப்பு துப்பாக்கிகள், ஏவுகணைகள் 150
- ★ சண்டை விமானங்கள் — 230

**சஞ்சாரன்**

கொரியாவுடன் 1993 ஜூன், ஜூலை மாதங்களில் இரு சுற்றுப் பேச்சுக்களை நடத்தி இருந்தது.

சர்வதேச அணுசக்தி ஏஜென்ஸியுடனும் தென்கொரியாவுடனும் தான் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாக அப்போது வடகொரியா உத்தரவாதம் அளித்தது. ஆனால் இந்த உத்தரவாதம் பின்னர் காற்றில் பறக்கவிடப்பட்டது.

**பூகோள ரீதியாக**

கிழக்கு ஆசிய நாடான கொரிய தீபகற்பம் 450 மைல் நீளம் கொண்டது.

கொரியாவின் பிரதான பூமி சீனாவின் மஞ்சூரியாவுடன் எல்லைகளைக் கொண்டது.

சோவியத் யூனியனுடனும் கொரியாவுக்கு குறுகிய எல்லை உண்டு.

ஆகச் சமீபமாக உள்ள ஜப்பானிய தீவுகள் 50 மைல் தூரத்தில் உள்ளன.

வடகொரியா 46 540 சதுர மைல்களைக் கொண்டது. தென்கொரியா 38 022 சதுர மைல்களைக் கொண்டது.

வடகொரியாவில் தொழிற்சாலைக்குத் தேவையான தாதுப் பொருள்கள் அதிகம். தென் கொரியாவில் பண்ணைகளே அதிகம். வடகொரியாவை விட தென்கொரியா கூடுதலான சனத்தொகையைக் கொண்டது.

**1945 வரை ஒரே நாடாக இருந்தது**

கிறிஸ்துவுக்கு முன் 2333 ஆம் ஆண்டில் கொரியா என்ற நாடு உருவாக்கப்பட்டது.

1945 ஆம் ஆண்டு வடகொரியா, தென்கொரியா என துண்டாடப்படும் வரை கொரியா ஒரே நாடாகவே இருந்தது. 1910 ஆம் ஆண்டு கொரியாவை ஜப்பான் கைப்பற்றி தனது பாதுகாப்புப் பிரதேசமாக வைத்திருந்தது.

1945 இல் இரண்டாவது உலக மகாயுத்தத்தில் ஜப்பான் தோல்வி அடையும் வரை கொரியா ஜப்பானின் ஒரு பாதுகாப்புப் பிரதேசமாகவே இருந்து வந்தது.

1945 ஆம் ஆண்டு ஜப்பான் தோல்வி அடைந்து சரணாகதி அடைந்த சமயம் கொரியாவின் வடபகுதி சோவியத் படைகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. தென்பகுதி அமெரிக்கப் படைகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. சோவியத் – அமெரிக்க கட்டுப்பாட்டுப் பிரதேசங்களைப் பிரிக்கும் எல்லையாக 38 ஆவது சமாந்தர ரேகை இருந்தது.

ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையின் கீழ் முழுக் கொரியாவுக்கும் தேர்தலை நடத்தி ஓர் அரசாங்கத்தை ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பயனளிக்கத் தவறின.

தனது கட்டுப்பாட்டுப் பகுதியில் தேர்தலை நடத்த சோவியத் யூனியன் எதிர்ப்புத் தெரிவித்தது.

எனவே 1948 ஆம் ஆண்டு ஐ. நா. மேற்பார்வையில் தெற்கில் மட்டும் தேர்தல் நடத்தப்பட்டது. இப்படி உருவானதுதான் தற்போது கொரியக் குடியரசு என்று அழைக்கப்படும் தென்கொரியா ஆகும்.

வடக்கே தேர்தல் எதுவும் நடத்தப்படாமல் கிம் இல் சுங் (Kim Il Sung) தலைமையில் சோவியத் யூனியனின் ஆதரவுடன் கொரிய ஜனநாயக மக்கள் குடியரசு அமைக்கப்பட்டது.

அதுவே தற்போது வடகொரியா என அழைக்கப்பட்டு வருகிறது.

கிம் இல் சுங் இன்னமும் வடகொரியாவின் ஜனாதிபதியாக இருந்து வருகிறார்.

1945 ஆம் ஆண்டு இரு அரசியல் பிரிவுகளாக துண்டாடப்பட்டிருந்த கொரியா 1948 இல் இரு நாடுகளாகத் துண்டாடப்பட்டது.

தென்கொரியாவின் இறைமையை அங்கீகரிக்க மறுத்த வடகொரியா, யுத்தம் மூலம் தென்கொரியாவைத் தன்னுடன் இணைக்கும் நோக்கத்துடன் 1950 ஆம் ஆண்டு தென்கொரியா மீது படையெடுப்பை நடத்தியது. இதுவே 1950 – 53 கொரிய யுத்தம் ஆகும்.

தற்போது ஏற்பட்டுள்ள பதற்ற நிலை கடந்த 40 ஆண்டு காலமாக கொரிய தீபகற்பத்தில் இருந்து வரும் பதற்ற நிலையின் உச்சம் எனலாம். ★

## கொரிய யுத்தம் 1950 – 53

1950 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25 ஆம் திகதி 38 ஆவது சமாந்தர ரேகையைத் தாண்டி வந்து வடகொரியப் படைகள் தென் கொரியப் படைகளைத் தாக்கின. இதுவே கொரிய யுத்தத்தின் ஆரம்பம்.

ஐ. நா. பாதுகாப்புச் சபை உடனடியாகக் கூடியது.

யுத்த நிறுத்தம் செய்யும் படியும் —

படைகளை பழைய எல்லைக்கு வாபஸ் பெறும் படியும் தீர்மானம் நிறைவேற்றியது.

இக்கோரிக்கை வடகொரியா ஏற்கவில்லை. நிராகரித்து விட்டது.

இது சம்பந்தமான தீர்மானம் ஐ. நா. பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றப்பட்ட சமயம் வடகொரியாவின் நட்பு நாடான சோவியத் யூனியனால் ''வீட்டோ'' அதிகாரத்தைப் பயன்படுத்தி அதனைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. சீனாவுக்கு ஐ. நாவில் அப்போது இடம் அளிக்க மறுக்கப்பட்டிருந்தது. இதனை ஆட்சேபித்து சோவியத் யூனியன் ஐ. நா. கூட்டங்களை பகிஷ்கரித்து வந்தது.

1950 ஜூன் 27 ஆம் திகதி ஐ. நா. பாதுகாப்புச் சபை மீண்டும் கூடியது. தென் கொரியாவுக்கு ராணுவ உதவிகளை வழங்குமாறு அங்கத்துவ நாடுகளைக் கோரும் தீர்மானத்தை அது நிறைவேற்றியது. 28 ஆம் திகதி தென் கொரியத் தலைநகர் சோல் (Seoul) வடகொரியப் படைகளிடம் வீழ்ச்சி அடைந்தது.

கொரிய யுத்தத்தில் வடகொரியாவுக்கு சீனா உதவியது. படைகளையும் அனுப்பி வைத்தது.

யுத்தத்தில் வடகொரியா தோற்கடிக்கப்படுமானால் தனது எல்லைக்கு அமெரிக்கப் படைகள் வந்துவிடும் என்று சீனா அஞ்சியது. சீனா உடனடியாகப் போரில் குதிக்க இதுவே காரணமாக இருந்தது.

சீனா தொண்டர்கள் என்ற பெயரிலேயே தனது படைகளை அனுப்பி இருந்தது. 4 லட்சம் சீனப் படையினர் வடகொரியாவுக்கு ஆதரவாக யுத்தத்தில் இறங்கி இருந்தனர். அமெரிக்கப் படைகளும் சீனப் படைகளும் பல போர் முனைகளில் நேருக்கு நேர் மோதின.

கொரிய யுத்தத்தில் வடகொரியாவுக்கு எதிராக தென் கொரியப் படைகளுடன் ஐக்கிய நாடுகள் படைகளும் அமெரிக்கப் படைகளும் அமெரிக்காவின் நேசப் படைகளும் போரிட்டன.

ஐக்கிய நாடுகள் சபை சார்பாக 20 நாடுகளைச் சேர்ந்த படைகள் போரில் ஈடுபட்டிருந்தன. ஐ. நா. படையிலும் அமெரிக்க வீரர்களே கூடுதலாக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். 1945 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் யுத்தம் ஒன்றில் முதல் தடவையாக ஐ. நா. படைகள் ஈடுபடுத்தப்பட்டன.

மூன்று வருடங்கள் நீடித்த கொரிய யுத்தத்தில் 54,246 அமெரிக்கப் படை வீரர்கள் கொல்லப்பட்டனர். சீன, வட கொரியப் படையினரிலும் ஆயிரக்கணக்கானோர் மாண்டனர். நூற்றுக்கணக்கான கிராமங்களும், நகரங்களும் அழிந்து தரைமட்டமாகின.

இந்த யுத்தத்தின் ஆரம்பத்தில் வடகொரிய — சீனப் படைகளின் கையே ஓங்கி இருந்தது. பல தோல்விகளைச் சந்தித்தே தென் கொரிய தரப்புப் படைகள் போராடின.

இந்த யுத்தம் அரசியல் ரீதியாக எவருக்கும் வெற்றி என்று கூற முடியாது. ஏனெனில் யுத்தம் எங்கு ஆரம்பமானதோ அதே இடத்திலேயே முடிவடைந்தது. யுத்தம் ஆரம்பத்தில் இருந்த 38 ஆவது சமாந்தர ரேகையே மீண்டும் இரு நாடுகளுக்கும் எல்லையாகின. யுத்தத்தின் முடிவில் இரு தரப்பும் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம், இரு நாடுகளின் பிரிவினையையும் சட்ட ரீதியானதாக்கி விட்டது.

சோவியத் தலைவர் ஜோஸப் ஸ்ராலினின் (Joseph-Stalin) மறைவு, அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஐஸன்ஹோவரின் (Eisenhower) வெற்றி ஆகியவற்றால் அமெரிக்காவிலும் சோவியத் யூனியனிலும் சமாதானத்துக்கு சாதகமான அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டன. கொரிய யுத்தம் முடிவுக்கு வர இந்த அரசியல் மாற்றங்களும் காரணமாக இருந்தன எனலாம்.

1953 யுத்தத்தின் பின்னர் வடகொரியாவை கட்டி எழுப்புவதில் சோவியத் யூனியனும் சீனாவும் உதவின. தென் கொரியாவுக்கு அமெரிக்கா உதவி செய்து வந்தது.

1989 – 90 இல் சோவியத் யூனியன் வீழ்ச்சி அடையும் வரை சோவியத் யூனியனுடனும் சீனாவுடனும் வடகொரியா சமமான உறவுகளை வைத்திருந்தது. சோவியத் யூனியனின் வீழ்ச்சியின் பின்னர் சீனாவே வடகொரியாவின் நெருங்கிய நட்பு நாடாக இருந்து வருகிறது.

# பொருளாதார விடுதலைக்கு வழிகாட்டும் கிராமியப் பாசறைகள்

'மறக்கப்பட்ட' கிராமங்களில் வாழும் மக்கள் இன்று புதுவாழ்வு பெற்று வருகின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறையினரால் நடத்தப்பட்டு வரும் கிராமியப் பாசறைநிகழ்வுகள் புறக்கணிக்கப்பட்ட நிலையில் வாழும் இம்மக்களின் ஒளிமயமான வாழ்வுக்குவழி வகுத்துள்ளன.

வலிகாமம் வடக்குப் பகுதியில் நிற்சாமம் கிராமத்திலும்—

வடமராட்சிப் பகுதியில் இராஜ கிராமத்திலும்—

தென்மராட்சியில் மறவன்புலோ, நாவற்குழி தெற்கு ஆகிய கிராமங்களிலும் நடத்தப்பட்ட கிராமப் பாசறை நிகழ்வுகள்—

கடந்த மாதம் 20 ஆம்திகதி முதல் 25 ஆம் திகதி வரை கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவில் புத்தூர் மேற்கு, சிறுப்பிட்டி மேற்கு ஆகிய கிராமங்களில் நடத்தப்பட்டன.

சமூக, பொருளாதார, அரசியல் ரீதியில் பின்தங்கிய கிராமத்து மக்களை வாழ்வின் சகல துறைகளிலும் முன்னேற்றுவதையே இலட்சியமாகக் கொண்டு இக்கிராமியப் பாசறைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

**25 வருட இடைவெளி**

யாழ். நகருக்கும் கிராமியப் பாசறைகள் நடைபெற்ற கிராமங்களுக்கும் இடையேயான தூரம் சில மைல்கள் தான் என்றாலும்—

யாழ். நகர மக்களின் வாழ்க்கைத் தரத்துக்கும் இக்கிராமங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்துக்கும் இடையேயான 'வளர்ச்சி இடைவெளி' 25 ஆண்டுகளுக்கு பின்னோக்கியே அமைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

சொந்த மண்ணில் விடுதலைக்காகப் போராடும் தமிழினம் — அந்த மண்ணில் அடிப்படை வசதிகளே இன்றி புறக்கணிக்கப்பட்ட நிலையில் வாழும் மக்களின் சமூக பொருளாதார விடுதலைக்கு என்ன செய்தது, என்ன செய்து கொண்டு இருக்கிறது, என்ன செய்யப் போகின்றது என்பதை எடுத்துக்காட்டுவதாக கிராமியப்பாசறை நிகழ்வுகள் திட்டமிடப்பட்டு, நடத்தப்பட்டு வருகின்றன.

**மண்ணின் மைந்தர்கள்**

இக்கிராமங்களில் வாழும் மக்களின் தேவைகள் அவர்களின் குறைபாடுகள் பற்றி நுணுக்கமாக ஆராய்ந்து தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் புள்ளி விவரங்களை தயாரித்துள்ள ஆய்வறிக்கைகளை மையமாக வைத்தே செயற்திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

கடந்த மாதம் கிராமியப் பாசறைகள் இடம் பெற்ற புத்தூர் மேற்கு சிறுப்பிட்டி மேற்கு ஆகிய கிராமங்கள்

**மறக்கப்பட்ட கிராமங்களில் புறக்கணிக்கப்பட்ட மக்கள்**

பற்றிய ஆய்வறிக்கையின் ஓரிடத்தில் ...

''...... இடப்பக்கம் ஆளுயரக் குடிசைகளும்வலதுபக்கம் சிறுபற்றைக் காணிகளையும் கொண்டுள்ள நீகள் வீதியில் சற்று உள்ளே செல்வோமாயின், அழகிய சிறுவர்கள் அழுக்குப்படிந்த [illegible] உடன் ஆரவா[illegible] தருவார்கள் [illegible] கிழாடை எல்லாம் ஒராடையாக சுரத்தைத் தோள்வரை போர்த்திய வண்ணம் உலாவரும் சிறுவர்களும் நீலக்களர் காற்சட்டை அவ்வூர் செம்மண் கறையாய் தோற்றமளிக்க நிலத்தில் உருண்டு புரண்டு விளையாடி வரும்சிறுவர்களும் தெருவெங்கும் தென்படுவார்கள்'' — என்று எமது மண்ணின் மைந்தர்கள் பற்றி கூறப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்ல......

''இக் கிராமமானது நிலவுடைமையற்ற கூலி உழைப்பாளர்களான மக்களைக் கொண்ட மிகவும் பின்தங்கிய கிராமமாகும் சமுதாயத்[illegible] புறக்கணிக்கப்பட்டு காரி[illegible] அடக்கு முறையின் கொடூரத்தால் தாக்கப்பட்டு நாகரீக மனிதர்கள் என்று தம்மைத் தாங்களே பாவனை செய்யும் சிலரின் முகச்சுழிப்பைப் பெற்ற கிராமம்'' என்று அந்த ஆய்வறிக்கையில் இன்னோரிடத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

**அர்ப்பணிப்புடன் நடக்கும் பாசறை**

இதனால்தான் மலரப் போகும் தமிழீழத்தில் அனைத்து மக்களுக்கும் ஏற்றத்தாழ்வில்லாத ஒரு சமூக வாழ்க்கை அமைய வேண்டும் என்ற உன்னத லட்சியம், அர்ப்பணிப்புடன் இக்கிராமியப் பாசறை நிகழ்வுகளை விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் தீவிர அக்கறையுடன் நடத்தி வருகின்றனர்.

**ஐந்து நாட்களிலும்**

விடுதலைப்புலிகளின் மருத்துவப் பிரிவினர் இடம் பெயர்ந்தோர் முகாம்களுக்குச் சென்று அங்குள்ள நோயாளர்களுக்குச் சிகிச்சை அளித்தனர் வீடுவீடாகச் சென்று சுகாதாரம் பேணுவது பற்றி கலந்துரையாடினர் வீடுகளில் உள்ள கிணறுகளுக்கு குளோரின் இட்டனர். மற்றும் சுகாதாரம் சம்பந்தமான விடியோ படங்களை அம்மக்களுக்குப் போட்டுக் காண்பித்தனர்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் கமக்காரர் அடையாள அட்டை

**தொல்லியூர் குமார்**

களை விநியோகித்தனர். மரக்கன்றுகள் நடுகை, கால்நடைகளுக்குத் தடுப்பூசி, விவசாயிகளுக்கு மண்ணெண்ணெய் விநியோகம், செயற்கை முறைச் சினைப்படுத்தல் மற்றும் சிவில் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கான ஆய்வுகளில் பொருண்மிய நிறுவனத்தினர் ஈடுபட்டனர்.

மகளிர் அமைப்பினர், அங்கு வாழும் பெண்களின் பிரச்சினைகளை உன்னிப்பாக அவதானித்தனர். பெண்களுடன் கலந்துரையாடி அவர்களுடைய வாழ்க்கைப் பிரச்சினைகளை கேட்டறிந்தனர். விடிவெள்ளி — உதயதாரகை, சாயபசிவம் ஆகியவற்றின் உற்பத்திப் பொருள்களின் கண்காட்சியும் நடத்தப்பட்டது. கிராமப் பெண்களுக்கு சுயதொழில் வேலைவாய்ப்பு வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டது.

கலை, பண்பாட்டுக்கழகத்தினர் கிராமத்து மக்களுடன் இணைந்து அபிநய நடனம் கிராமிய நடனம் மற்றும் நாடகங்களை நடத்தினர்.

அங்குள்ள சனசமூக நிலையங்களுக்கு இடையேயும், விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயும் கரப்பந்தாட்டம் வலைப்பந்தாட்டம் சங்கீதக்கதிரை தாச்சிப்போட்டி, உதைபந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களை யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினர் சிறப்பாக நடத்தினர்.

கிராமங்களில் போஷாக்கு நிலை பற்றி ஆய்வு, ஊட்டச்சத்து வழங்குதல் குழாய்க் கிணறு அமைப்பது, நெசவு நிலையம் அமைப்பது,குடிசைகள் அமைப்பது,வீதித்திருத்த வேலைகள், கடனுதவி வழங்குவது வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களுக்கு பாய் படுக்கை விரிப்பு வழங்குவது, ஊனமுற்றவர்களின் நலன் பேணல் ஆகியன பற்றிய வேலைத்திட்டங்களை நிறுவனம் ஒன்று மேற்கொண்டிருந்தது.

(5ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல இன பால் ஆடு 2 போத்தல் பால் பெறக்கூடிய இரு குட்டிகளுடனும், ஒரு வயதுடைய ஜமுனா பாறி மறி ஆடும் விற்பனைக்குண்டு. அ. அன்ரன் இல. 155, நாவாந் குறுக்குத் தெரு (காவல்துறைக்கு அருகில்), யாழ்ப்பாணம். (31351)

3½ மாதம் நிரம்பிய Golden Comet சிவப்பு பேட்டுக் கோழிகள் 50 விற்பனைக்குண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (31342)

அடை வைக்கக் கூடிய நல்ல இன கோழி முட்டைகள், பட்டம், வான்கோழி முட்டைகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (31341)

ஓர் ஆண்டு பூர்த்தியாகிய பொமனேரியன் ஆண் நாய்க் குட்டி ஒன்று விற்பனைக்குண்டு. நேரில் வரவும். சங்கரப்பிள்ளை, இல. 809, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (31338)

நல்ல இன மறி ஆடு விற்பனைக்கு உண்டு. 85, பிரகாசம் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். [31356]

ஒரு கிழமை சேவல் குஞ்சுகளும், இறைச்சிக் கோழியும் விற்பனைக்குண்டு. இடம் விக்கினேஸ்வரா டிஸ்பென்ஸரிக்கு முன்னாலும் பெற்றோல் செற்றுக்கு அருகிலும்: K. K. எஸ். றோட், கல்லாகம். (7232)

யாழ். காங்கேசன்துறை வீதி, நாச்சிமார் கோயிலடியில் ஒன்று முதல் ஒன்றரை பரப்பு காணி, கிணறு அத்திவாரத்துடன் விற்பனைக்குண்டு. சி. தர்மராஜா இல. 555/4, கே. கே. எஸ். வீதி [மதவடி], யாழ்ப்பாணம். (31355)

அடை வைக்க உகந்த பிறமா, சில்கி, பாமாஸ், சில்வர் சிப்பிறைட், பொலிஸ், பட்டம், பிறேசில், ஸ்பங்கிளர் கோழி முட்டைகள் உடன் விற்பனைக்கு உண்டு. 684, நாவலர் வீதி (நாவாந்துறை வீதி, குமரன் படிப்பகத்திற்கு அண்மையில்) ஐந்துசந்தி, யாழ்ப்பாணம். (31365)

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள ஒக்ஸ்போட் கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல 48/1, முதலாம் ஒழுங்கை (ஐங்கரன் விளையாட்டுக்கழக ஒழுங்கை), பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். [சி-8438]

## இறைச்சிகோழி விற்பனை

புறொயிலர் இறைச்சிக் கோழி உடன் விற்பனைக்கு உண்டு. எந்நேரமும் சுத்தம் செய்து மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். ஆஷா கோழிப் பண்ணை, 1ஆம் கட்டை, பருத்தித்துறை. (31349)

Broiler இறைச்சிக் கோழிகள் தினமும் காலை 7-00 தொடக்கம் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். விலை கிலோ 150/- நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (31340)

புறொயிலர் இறைச்சிக் கோழி சனி, ஞாயிறு காலை 7-00 மணி முதல் 11-00 மணி வரை சுத்தம் செய்து கொடுக்கப்படும். (வெலிங்டன் சந்திக்கு வடக்கு வீதி) 382, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (31352)

## தேவை

புடவை வியாபாரம் பின்போட்டு விற்பனை செய்யக் கூடிய பெண்பிள்ளை ஒன்று தேவை. நேரில் சமுகம் தரவும். சங்கரப்பிள்ளை அன் சன்ஸ், இல. 21, மக்கள் நவீன சந்தை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (31337)

## மணமகன் தேவை

32 வயது நிரம்பிய, அச்சுவினி, செவ்வாய் 8 இராகபாவம் 60, அழகிய A/L படித்த, நற்குணமுள்ள பெண்ணுக்கு, செவ்வாய்க் குற்றமுள்ள மணமகனைத் தேடுகிறார்கள். கடித மூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல 657, C/o உதயன், யாழ்ப்பாணம். (31317)

## திருத்துதல்

றபர் ஸ்ராம், டேற் ஸ்ராம், பிளாஸ்ரிக் நேம்போட், விளம்பர போட் உடனுக்குடன் செய்து கொள்ளவும். பழையவைகளைத் திருத்திப் பெற்றுக் கொள்ளவும். "விமா றபர் ஸ்ராம்ஸ்" 234, நாவலர் வீதி (ஆனைப்பந்தி வைத்தியசாலை முன்பாக), யாழ்ப்பாணம். (31316)

## கணித வகுப்புகள்

பிரத்தியேக A/L தூய, பிரயோக கணித வகுப்புகள். London A/L, பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பிரத்தியேக கணித வகுப்புகள். தொடர்பு: க. உமாகதன் (M. Sc. அமெரிக்கா), கிழமை நாட்களில் பொருண்மிய நிறுவனம், தாவடி. சனி, ஞாயிறு: 112 பலாலி வீதி (வனாக அண்மையில்) (31344)

## மிருதங்கம்

புதிய மிருதங்கம் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. விரும்பிய அளவுகள் மலிவாக ஓடருக்கும் செய்து கொள்ளலாம். கோவிந்தபிள்ளை விஜயகுமார், 192/1. நாவலர் வீதி, பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம். (31327)

## ரைப்பிங்

தமிழ், ஆங்கில ரைப்பிங் (Typing) ஸ்ரென்சில் கட்டிங் றோணியோ ஆங்கில மொழி பெயர்ப்பு முதலிய வேலைகள் செய்து கொடுக்கப்படும். C. T. I. லோட்டன் வீதி, மானிப்பாய். (7442)

## புதிய வகுப்புகள்

Yogi Home Science Academy 15-6-94 புதன்கிழமை முதல் Cookery, Cake Icing, Fondant Icing Sugar Flowers, Make up and Hair Dressing புதிய வகுப்புக்கள் ஆரம்பமாக உள்ளன. விரும்பியவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். 71B, நாயன்மார் வீதி, கச்சேரி நல்லூர் றோட் நல்லூர், யாழ்ப்பாணம். (31359)

## கலைவியியல்

கல்வியியல் கட்டுரைகள் சோ. சந்திரசேகரம் விலை 110/- இலங்கையில் கல்வி, இலங்கையில் கல்வி கட்டுரை தொகுப்பு: சோ. சந்திரசேகரம். மா. கருணாநிதி விலை 120/- விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-8271)

## O/L MATHS -94

Distinction, Credit பெறு பேறுடைய 15 வருடங்கள் கிடைத்தாள்கள் திருத்திய அனுபவமுள்ள B Sc ஆசிரியரால் (ஆண்டு 9, 10) கற்பிக்கப்படும். இல. 85 சிவன் கோயிலடி, திருநெல்வேலி. (7443)

## தவறிவிட்டது

கமர்கல் வேதநாயகம் பெர்னாண்டோ ஆகிய எனது அடையாள அட்டை (இல. (571281481 V) கடந்த ஞாயிற்றுக்கிழமை (5-6-94) கந்தர் மடம் மணத்தறை ஒழுங்கையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 580, ஆஸ்பத்திரி வீதியிலுள்ள எஸ். எம். பெர்னாண்டோ நிறுவனத்தில் ஒப்படைத்து சன்மானத்தைப் பெற்றுக் கொள்ளவும். (சி-8442)

## மகாதேவா ஜோதிடம்

வீடு, குறிப்பு, கை பார்த்தல்; குறிப்பு எழுதுதல்; பெயர் வைத்தல் ஆகியவற்றிற்கு ஜோதிடரைத் தினசரி 140, செம்மர் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம் எனும் முகவரியில் சந்திக்கலாம். (31347)

## கஜு விதை விற்பனை

கஜு (மரமுந்திரிகை) விதை (கோதுடன்) விற்பனைக்கு உள்ளது. மொத்தமாகக் கொள்வனவு செய்ய விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும். பனை அபிவிருத்திச் சபை, தேசிய வீடமைப்புச் செயலகம், யாழ்ப்பாணம். (சி-8439)

## மணமக்கள் தேவை

செவ்வாய்க்குற்றமற்ற 35 வயது ஆண் டாக்டருக்கும், 40 வயது பட்டதாரிக்கும், 37 வயது T. Aக்கும், 32 வயது பெண் டென்ரல் டாக்டருக்கும் தேவை. மகிள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (31363)

## EASY ENGLISH

ஆங்கிலம் இலகுவில் கற்க, கற்பிக்க T. M. அன்ரனிப்பிள்ளை L.L.B. எழுதிய "ஈசி இங்கிலீஸ்" (Easy English Part - I, V) தொகுப்பு பெரும் துணை புரியும் ஆசிரியரின் புதிய வெளியீடாக "ஈசி லற்றின் எக்ஸ்பிறசன்ஸ்" (Easy Latin Expressions) ஆங்கிலம், தமிழ் மொழி பெயர்ப்புடன் வெளிவந்துள்ளது எங்கும் பெற்றுக் கொள்ளலாம். (31362)


# பற்சிகிச்சை நிலையம்

பிரதான வீதி, ஆவரங்கால்.
Dr. பாலகிருஷ்ணன் வைத்தியசாலை

சனி — ஞாயிறு
காலை 9மணி தொடக்கம் பிற்பகல் 1மணி வரை

கொட்டைக்காடு (அரசினர் வைத்திய சாலைக்கு அருகில்)

சனி — ஞாயிறு
பிற்பகல் 2மணி தொடக்கம் பிற்பகல் 4மணி வரை

★ பல் பிடுங்குதல்
★ பல் அடைத்தல்
★ பல் கட்டுதல்
★ பல் சீரமைத்தல்
★ பல் துப்புரவாக்குதல்

DR. R. சிறிரவீந்திரா

[7438]


# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
27 – 11 – 1967

அரக்கனின் அநியாய அழிப்பு:
12 – 06 – 1989

## சின்னத்துரை சிவகடாட்சம்

(கடாட்சம்)
(மோட்டார் சைக்கிள் மெக்கானிக்)

உன் ஆத்மா சாந்தியடைய சிவகுருநாதனை வேண்டிப் பிரார்த்திக்கிறோம்.

தந்தை, தாய்,
அண்ணாமார், அக்காமார்,
தங்கை.

விழிசிட்டி,
தெல்லிப்பழை


# சுவையான கேக்

தரமாகத் தயாரிக்க
மனையியல் ஆசிரியர்களின்
இன்றைய சிபார்சு




றோயல் பேக்கிங் பவுடர்

சந்தைப்படுத்துவோர்:
றோயல் இன்டஸ்றீஸ்
பொன்னையா லேன்,
ஆனைக்கோட்டை.

[சி-8399]


# இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

யாழ் கிளை - வலி. மேற்கு பிரிவு

## அதிர்ஷ்டலாபச்சீட்டு

12-06-1994ஆம் திகதி அதிர்ஷ்டம் பார்க்கப்பட தீர்மானிக்கப்பட்ட எமது அதிர்ஷ்டலாபச் சீட்டு தவிர்க்க முடியாத காரணங்களினால் 17-07-1994ஆம் திகதிக்குப் பின்போடப்பட்டுள்ளது. 12-06-1994 எனத் திகதியிடப்பட்ட சகல சீட்டுக்களும் செல்லுபடியாகும். சிரமத்திற்கு மன்னிக்கவும்.

செயலாளர்,
வலி மேற்கு பிரிவு.

[சி-8445]

# இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

யாழ். கிளை - வலி. மேற்கு பிரிவு

## மாடு ஏல விற்பனை

இப் பிரிவின் வண்டில் பாவனைக்கு பாவிக்கப்பட்ட நல்ல நிலையிலுள்ள மாடு (எருது) விற்பனைக்கு உண்டு 19-06-1994ஆம் திகதி பிரிவுக் காரியாலயத்தில் (மாவடி, வட்டுக்கோட்டை) காலை 10-00மணிக்கு ஏலத்தில் விற்கப்படும்.

செயலாளர்,
வலி மேற்குப் பிரிவு.

மாவடி,
வட்டுக்கோட்டை.

[சி-8446]

# ஓராண்டு நீங்கா நினைவலைகள்



## அமரர் தம்பையா இலட்சுமணசாமி

(ஆசிரியர் - சில்லாலை R.C.T M.S.)

இன்பமலர்வு: 02 – 04 – 1942
துன்பமறைவு: 24 – 05 – 1993
திதி: 12 – 06 – 1994

ஓராண்டு பல ஆண்டாய் கழிந்ததையா
இருண்ட வாழ்வில் ஒளி விளக்கு காணோமையா
மழலைகள் உனைக் காணாது வாடுதையா,
எழுமுனைந்த உன் குடும்பம் கரை தெரியாது தள்ளாடுதையா,
நினைவினில் நின்னை நினைக்க துன்பம் பொங்குதையா
கனவிது வென்றே உன் வாழ்வு மறைந்ததையா
கனமான எம் வாழ்வு கலங்குதையா - இனி
உலகினில் நாம் வாழுமட்டும் உம் நினைப்பே நிதம் நிற்குமையா.

மனைவி, பிள்ளைகள்.

நாவலடி லேன்,
திருநெல்வேலி மேற்கு,
யாழ்ப்பாணம்.

(31358)

### அன்பளிப்பாக வழங்கப்பட்ட

# சுவீடிஷ் மருந்து வகைகள் கப்பல் மூலம் யாழ். வரும்

யாழ்ப்பாணம், ஜூன் 12
சுவீடிஷ் அரசாங்கம் யாழ். மாவட்டத்துக்கு வழங்கியுள்ள 24 லட்சம் ரூபா பெறுமதியான மருந்து வகைகள் கப்பல் மூலம் எடுத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து செயலகத்துக்கு அனுப்பிய செய்தியில் யாழ். அரச அதிபர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்தியாவசிய மருந்துகள், விற்றமின்கள், இரும்புச் சத்து குளிசைகள், பூச்சி மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் இந்த உதவித் தொகுதியில் அடங்கும்.

இந்த மருத்துவ உதவிப் பொருள்களை அடுத்து வரும் கப்பலில் யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளதாக செயலகத்துக்கு அவர் அறிவித்துள்ளார். (இ-3)

# பொதுக்கல்வி தேர்வு பற்றிய கூட்டம்

தமிழீழ பொதுக் கல்வித் தேர்வுக்காக நியமிக்கப் பட்ட சகல பணியாளர்களுக்கும்—கிளைகளுக்குப் பொறுப்பான செயலாளர்களுக்கும் — சகல கோட்டங்களைச் சேர்ந்த பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்குமான கூட்டம் ஒன்று, இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையில் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது

நவாலி வடக்கு, மானிப்பாய்

# அட்டகிரி முருகன் தேவஸ்தான மகோற்சவ விழா

## தொடர் தெய்வீக பேருரைகள்

**12-06 94 — 23-06-94** வரை
தினமும் இரவு
7-45 தொடக்கம் 8-45 வரை
(12 தினங்கள்)



நிகழ்த்துபவர்
அருள் மொழிச் செல்வர், பைந்தமிழ் பாவலன், செந்தமிழ்ச் செம்மல், சொற் பேராழி
வாகீச கலாநிதி

## கனகசபாபதி-நாகேஸ்வரன் (M. A.)

(பரம்பரை அறங்காவலர், நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்)

| திகதி | பொருள் |
| --- | --- |
| 12-06-94 | முருகன் அவதாரம் |
| 13-06-94 | தமிழும் முருகனும் |
| 14-06-94 | முருகனும் ஔவையும் |
| 15-06-94 | கந்தபுராணத்தில் முருக தத்துவம் |
| 16-06-94 | முருகனின் திருப்பெரு வடிவம் |
| 17-06-94 | அருணகிரி கண்ட முருகன் |
| 18-06-94 | கந்தரனுபூதியில் கலியுக வரதன் |
| 19-06-94 | அலங்காரத்தில் முருக பிரபாவம் |
| 20-06-94 | வேலின் தத்துவார்த்தம் |
| 21-06-94 | மயிலின் தத்துவார்த்தம் |
| 22-06-94 | சேவலின் தத்துவார்த்தம் |
| 23-06-94 | வள்ளி திருமணம் |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அன்பளிப்பு:
சி. சிவகுமார்,
குமரன் வர்த்தக நிலையம்,
(பலசரக்கு வியாபாரம்)
நவாலி வடக்கு, மானிப்பாய்.

[சி-8444]

# திருக்குடும்பக் கன்னியர் மடம்

யாழ்ப்பாணம்

## பழைய மாணவர் சங்கம்

எமது சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் மதிய விருந்தும் 26-06-1994 ஞாயிற்றுக்கிழமை நடைபெறுமென சகல பழைய மாணவர்களுக்கும் அறியத் தருகிறோம்.

நண்பகல் 12-00 ஒன்று கூடுதலும் மதிய விருந்தும்
பிற்பகல் 3-00 வருடாந்தப் பொதுக் கூட்டம்

இடம்: விடுதி மண்டபம்

மதிய உணவில் பங்குபற்ற விரும்புவோர் ஜூன் 18ஆம் திகதிக்கு முன் ரூபா 50/- செயலாளரிடம் செலுத்தி தமது பெயரைப் பதிவு செய்யுமாறு வேண்டுகிறோம்.

அங்கத்தவர் தமது ஆண்டுச் சந்தாவையும் நிலுவைகளையும் செலுத்தி அங்கத்துவத்தைப் புதுப்பித்துக் கொள்ளவும்.

நன்றி.

(திருமதி) ஜி. விமலதாஸ்,
செயலாளர்.

[7444]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
192/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## மருத்துவ மாணவருக்கு!

இன்று தாயக விடுதலைக்காக ஒரு தலைமுறை போராடிக் கொண்டிருக்கும் போது— அந்தப் போராட்டத்திலே முழுத் தமிழினமும் இணைந்து நின்று போரின் அவலங்களை சுமந்து கொண்டு, அடுத்த தலைமுறைக்காக தன்னை ஆகுதியாக்கிக் கொண்டிருக்கும் போது—

அந்தவேளையில் இந்த மண்ணின் வளங்களை பயன்படுத்தி உயர்பவர்கள் தாம் உயர்ந்ததும், தாம் ஏறிய ஏணியைதட்டிவிடும்செயலைச் செய்யாமல், தமதுதாயகபூமிக்கும் தமது மண்ணின் விடுதலைக்கும் உதவ வேண்டும்: உழைக்க வேண்டும்.

முக்கியமாக கல்வித் துறையில் உயர்நிலைக்குச் செல்வோர் இந்த விடயத்தில் அதிக கடப்பாடு மிக்கவர்கள்.

இந்த மண்ணிலே ஆரம்ப உயர் வகுப்பு கல்வியையும் அதன் பின் பல்கலைக்கழக பட்டத்தையும் பெறுபவர்கள் பட்டம் பெற்றவையோடு மண்ணை மறந்து விடுவது மிக வேதனைக்குரியதாகும்.

இத்தகையோர் மேலும் உயர் கல்வி வேண்டி வெளி நாடுகளுக்குச் செல்வதை ஓரளவு புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது;

ஆனால் பட்டம் பெற்றவுடன் பணம் சம்பாதிப்பதை மட்டுமே இலக்காகக் கொண்டு தாயக பூமியை விட்டு வெளியேறுவோரை இந்த தாயகப் பூமி மன்னிக்காது.

''யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று வெளியேறும் டாக்டர்கள் அங்கு பணிபுரிய முன்வரும் வரை யாழ். மாவட்டத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளில் டாக்டர்களுக்கு நிலவும் பற்றாக்குறை நீடிக்கத்தான் செய்யும்.'' — இப்படி ஸ்ரீலங்கா அரசின் பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் ஜெஜி பெரேரா— அதுவும் ஒரு சிங்களவர் — சுட்டிக் காட்டும் நிலைக்கு எமது நிலை தாழ்ந்து போய் இருக்கிறது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆயிரத்து இருநூறு டாக்டர்கள் இப்போது லண்டனில் மட்டும் கடுமையாக உழைத்து பணம் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள்; அவர்களில் பத்து சதவீதமானோர் யாழ்ப்பாணத்துக்கு — தமது தாயக பூமிக்கு — பணிபுரிய சேவையாற்ற வருவார்களேயானால் இங்கு நிலவும் மருத்துவர்களின் பற்றாக் குறை ஓரளவு நீங்கிவிடும்;

ஆனாலும்—

இவ்வளவு கஷ்டத்தின் மத்தியிலும்—

வெளிநாட்டில் தாங்கள் வகித்த பெரும் பதவிகளை— அங்கு தமக்கு மாதாந்தம் கையாகக் கிடைத்த வருமானத்தை — தூக்கி எறிந்து விட்டு இந்த மண்ணுக்காக உழைக்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன் இங்கு வந்து பணிபுரியும் சில டாக்டர்களும் எம்மிடையே இருக்கத்தான் செய்கிறார்கள்

இதுவரைநடந்தவை முடிந்தவையாக இருக்கட்டும் இந்த உத்தம டாக்டர்களைப் பின்பற்றி இனிமேலாவது யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறும் டாக்டர்கள், ஆகக் குறைந்தது தாம் யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற காலத்துக்கு சமனான காலத்துக்கேனும் இந்த மண்ணில் தங்கியிருந்து தமது மக்களுக்காக உழைக்க முன்வருவார்களா?

உயர் கல்வியைப் பூர்த்தி செய்த பின் தாம் எங்கு பணியாற்றுவது என்பதை முடிவு செய்யும் உரிமை அவர்களுக்கு இருக்கலாம்; அந்த உரிமையை நிலைநாட்ட வேண்டி அவர்கள் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தாக்கல்செய்யலாம்.

அதன் மூலம் சட்டத்தின் முன் தங்களின் உரிமையை அவர்கள் நிலைநாட்டலாம்! ஆனால் தார்மீக அடிப்படையில் —பொது நீதியின் முன்— தனது மனச்சாட்சிக்கு முன்— தங்கள் செயலை அவர்களால் நியாயப்படுத்தி விடமுடியாது

எந்த மக்களின் பிரேதங்களை வெட்டி, அதில் தமது கல்வியைப்பயின்றார்களோ— அந்த மக்களை அவர்கள் அடியோடு மறந்து விடுவது— அதுவும் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற நோக்கத்துக்காக மறப்பது— எந்த நீதியின் முன்னிலையிலும் நியாயப்படுத்திவிடமுடியாது.

# ஸ்ரீலங்காவிடம் வர்த்தக நலன் நாடும் நாடுகள்
# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு உதவுவதில் புதுநாட்டம்

தமிழர் தாயகத்தின் யுத்தம் தொடங்கி நான்கு வருடங்கள் முடிந்து விட்டன. இந்த யுத்தத்தின் தாக்கத்தினால் தமிழர்களின் வாழ்க்கை முன்னேற்றம் பல ஆண்டுகள் பின் தள்ளப்பட்டு விட்டது. இந்த நான்கு வருட காலத்திலும் தமிழர்களுக்கு ஏற்பட்ட அழிவுகளும், அவர்கள் அனுபவிக்கும் அவலங்களும் எழுத்துக்களால் வர்ணிக்கப்பட முடியாதவை.

எனினும் தமிழர்களின் வாழ்வைச் சிதைத்து அதன் மூலம் அவர்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்கிவிடலாம் என்று சிங்கள அரசியல்வாதிகள் போட்ட திட்டம் தவிடுபொடியாகி விட்டது.

தங்களது சுதந்திரத்தையும், உரிமைகளையும் நிலைநாட்டு

## ஐ.தே.க தேர்தலில் வெல்ல அமெரிக்கா பின்னணி உதவி!

வதற்காக — அவற்றை எய்துவதற்காக — எந்தக் கஷ்டங்களையும், துன்பங்களையும் தாங்குவதற்கும், எதிர்கொள்வதற்கும் அவர்கள் தயார். இதனைக் கடந்த நான்கு வருடங்களில் சிங்கள தேசத்துக்கும் அதன் அரசியல்வாதிகளுக்கும், அனைத்துலகத்துக்கும் தமிழர்கள் எடுத்துக் காட்டிவிட்டார்கள். கருங்கல் கூறின் இராணுவ, பொருளாதார அழுத்தங்களைக் கண்டு அஞ்சி தமது உரிமைப் போராட்டத்தைக் கைவிடாதிருப்பதில் உறுதி குலையாதவர்கள் தமிழர்கள் என்பதை நிரூபித்திருக்கிறார்கள்.

யுத்தம் நான்கு வருடங்களே நடைபெற்ற போதிலும் தமிழர்களின் உரிமைப் போராட்டம் சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன்னரே ஆரம்பமாகி விட்டது. இந்த ஐம்பது வருட காலத்திலும் தமிழர்களின் உரிமைப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டங்களை முன்வைத்தும், வாக்குறுதிகளைக் கொடுத்தும் சிங்களத் தலைவர்கள் ஏமாற்றினார்களே அன்றி உணர்வுபூர்வமாக உருப்படியாக எதனையும் செய்தார்கள் இல்லை;

அரசியல்

இந்த நான்கு வருட பேரழிவுகளின் பின்னரும், இராணுவ ரீதியான பல தோல்விகளின் பின்னரும் கூட தமிழர்களின் நியாயமான உரிமைகளை வழங்குவதற்கு சிங்களத் தலைவர்கள் மனம் கொள்ளவில்லை. ஆனால் வழமை போலவே தேர்தல் நன்மையைக் கருதி, தமிழர்களின் வாக்குகளைத் தமது பக்கம் கவர்ந்திழுப்பதற்காக தெற்கின் பிரதான அரசியல் அணிகள் இரண்டும் பேச்சுக்கள், தீர்வுகள், திட்டங்கள் என்று கலைலப்புக் காட்டத் தொடங்கியுள்ளன.

### தமிழருக்கு விவேகம் தேவை

ஐம்பது வருடம் பிரச்சினையை நான்கு மாதங்களில் மந்திர வித்தையால் தீர்த்து விட முடியும் என்று ஆசை வார்த்தை காட்டத் தொடங்கி விட்டார்கள். தமிழர்களை ஏமாற்றும் படலத்தை வெகு கச்சிதமாகக் கவர்ச்சிக் காட்சிகளுடன் இரு அணியினருமே ஆரம்பித்திருக்கிறார்கள்.

இப்போது கவனமாகவும், விழிப்பாகவும், விவேகமாகவும் நடந்து கொள்ள வேண்டியவர்கள் தமிழர்கள் தான். அதனை மனதில் இருத்திக் கொண்டு இரு அணியினரினதும் நடவடிக்கைகளை நோக்குவது பொருத்தமானதாகும்.

தென்னிலங்கை அரசியல் வானத்தை இப்போது பார்த்தால், எதிரணிக்கே மக்கள் ஆதரவு இருப்பது வர்ணக் கோலமாகத் தெளிவாகத் தெரிகிறது. ஐக்கிய தேசியக் கட்சியின் பதினேழு வருடத் தொடர் ஆட்சியில் மக்கள் வெறுப்படைந்து விட்டதே இதற்கு முக்கிய காரணம். தமது பொருளாதார, வாழ்க்கைக் கஷ்டங்களைப் போக்குவதற்கு சுதந்திரக்கட்சிக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்க விரும்புகிறார்கள் அவர்கள்.

குறிப்பாக பழைய - வயதானவர்களின் - தலைமைகளில் சிங்கள மக்கள் சலிப்படைந்து விட்டார்கள். சந்திரிக்கா போன்ற இளமைத் துடிப்புள்ள, புதிய நோக்குள்ள தலைமுறையிடம் தலைமைத்துவத்தை ஒப்படைக்க வேண்டும் என்ற விருப்பம் இளைஞர்கள் மட்டத்தில் மட்டுமன்றி, கல்விமான்கள், தொழில் சார் நிபுணர்கள் மட்டத்திலும் பிறந்திருக்கிறது.

எதிரணி சார்பில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவே ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவார் என்று அறிவிக்கப்பட்டிருக்கும் போதிலும், நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்படும் கடைசி நேரத்திலாவது அந்த முடிவு மாற்றப்படும். சந்திரிகாவே ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்படுவார் என்பது அனேகமாக நிச்சயமாகி விட்டது.

வைத்திய பரிசோதனைக்காக சிங்கப்பூர் சென்றிருக்கும் சிறிமாவோ, கடைசி நேரம் வரை காத்திருக்காமல் அதற்கு முன்னரே தமது மகளுக்கு இடம்விட்டுக் கொடுப்பார் என்றே எதிர்பார்க்கப் படுகிறது.

சந்திரிக்காவைப் பொறுத்த மட்டில் இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். என்பதில் உள்ளத் தெளிவுடனும் உறுதியுடனும் காணப்படுகிறாராம். தகப்பன் பண்டாரநாயக்காவின் புத்திக் கூர்மையும் கணவர் குமாரணதுங்காவின் பரந்த நோக்கும் அவரிடம் ஒன்று சேர்ந்திருப்பதாக அவரை அறிந்தவர்கள் தெரிவிக்கிறார்கள். அவை மட்டு

## தமிழர்களை தேடி நல்ல தருணம் ஏமாறா திருக்கும் விவேகம் தேவை

மன்றி அவர் சொந்தத்திலேயே முற்போக்குக் கருத்துடையவர் என்றும் செயல் திறனுடையவர் என்றும் அறிய வந்தது.

### மாற்றத்தை விரும்புபவர்

பாரிஸில் கல்வி கற்ற காலத்திலேயே அவர் மாற்றத்தை விரும்பும் ஒருவராக (Radicalist) புதியன செய்ய வேண்டும் என்பதில் தீவிரவாதப் போக்குடையவராக இருந்தார் என்று அவருடன் நெருங்கிய கல்விமான் ஒருவர் சூரியகாந்திக்குத் தெரிவித்தார்;

சிறுபான்மை மக்களின் உரிமைகளை வழங்கும் விதத்தில் இனப்பிரச்சினைக்குரிய தீர்வுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என்பதில் சந்திரிகா வெகு அக்கறையாகவும் அவதானமாகவும் இருக்கிறார். ஒரே கருத்துடையவர்களான பேராசிரியர் ஜி. எல். பீரிஸ், கலாநிதி ஜெயதேவா உயங்கொட போன்றவர்களைக் கொண்டு தீர்வுக்குரிய யோசனைகளைத் தயாரித்து

சூரியகாந்தி உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

வருவதும் அந்த அக்கறையின் நிமித்தமே என்று அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

நியாயமான தீர்வு யோசனையைத் தயாரித்துக் கொண்டு, அதனை அடிப்படையாக வைத்து, விடுதலைப் புலிகளுடன் கலந்தாலோசனை செய்ய வேண்டும், விரிவாகப் பேச வேண்டும் என்று சந்திரிகா பெரிதும் விரும்புகிறாராம்.

தெற்கின் பேரினவாதிகள் கூப்பாடு போடுவதற்கு இடம் வைக்காமல், முதலில் ஒரு தன்னாட்சித் திட்டத்தை முன்வைத்து, பதவிக்கு வந்த பின்னர் ஒரு சமஷ்டி அமைப்பைத் தோற்றுவிப்பது அவரினது உட்கருத்தாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

ஆயினும் பதவிக்கு வந்த பின்னர் பேரினவாதிகளின் எதிர்ப்பைச் சமாளித்துக் கொண்டு சமஷ்டித் திட்டத்தை அமுல் செய்யும் துணிவும், வல்லமையும் அவருக்கு வருமா என்பது குறித்துத் தமிழர்கள் சிந்திக்க வேண்டும். அவதானமாகவும், சமயோசித மாகவும் [illegible]

கொள்ள வேண்டும்:

### "பழைசு"களை தேடிச் செல்வோர்

நியாயமான தீர்வு ஒன்றை எட்டுவதற்கு விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டும் என்பதில் சந்திரிகா ஆர்வம் கொண்டுள்ளார் என்பதனை கொழும்பில் உள்ள தமிழ்க் குழுக்கள் எனப்படுவோர் மணந்து பிடித்து விட்டனராம்! அப்படி ஒரு நிலை உருவாகினால் தமது எதிர்காலம் இருண்டு போய்விடும் என்று உணர்ந்து, சுதந்திரக் கட்சிப் பிரமுகர்களைத் தாமாகவே சென்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்கள் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் பொருட்டு சந்திரிகாவை நாடாமல் சிறிமாவோவையும் அவரைப் போன்ற ''பழைசு''களையும் ஒருவர் பின் மற்றவராகத் தேடிச் செல்கிறார்களாம்.

இவர்களுடன் பேசுவதால் தமக்கு வாக்குக் கிடைக்காது புலிகளுடன் பேசி அவர்களோடுதான் இணக்கத்துக்கு வரவேண்டும் அப்போது தான் தமிழர்களின் வாக்குகளைத் திரளாகப் பெறலாம் என்பது அந்தப் ''பழைசு''களுக்குத் தெரியாதா என்ன?

ஏதோ வலிய வருபவர்களை எப்படி வேண்டாம் என்று சொல்லுவது என்று நினைத்துக் கொண்டு, அவர்களுடனும் பெயருக்குப் பேசுகிறார்களாம், பேசினார்களாம் சில சு. க. பிரமுகர்கள். சென்ற ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயக மக்கள் அணியில் இருந்த ஒரு சில குழுக்களை சிரித்து வரவேற்க வேண்டிய நன்றிக்கடன் சு.க. பிரமுகர்களுக்கு!

எந்த விடயத்திலும், நல்லவிளைவொன்று வராமல் குத்திக் கெடுப்பதில் தமிழர்களை தேர்ந்தவர்கள். தனது மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனம் பிழைக்க வேண்டும் என்று சிந்திக்கும் கூட்டங்கள் இன்னமும் இருக்கவே செய்கின்றன!

இனப் பிரச்சினைத் தீர்வு ஒன்றை முன்வைப்பதில் எதிரணியினர் உண்மையாகவே உழைக்கின்றனர் என்பதனையும், இது விடயத்தில் சந்திரிகா முழு ஈடுபாடாக உள்ளார் என்பதனையும் தமிழ்க் குழுக்கள் போலவே, டி. பி. விஜேதுங்காவும் மணந்து கொண்டார்.

எனவே இனப்பிரச்சினை விவகாரத்தில் எதிரணியை விடத் தான் முந்திக் கொள்ள வேண்டும் என்று முடிவெடுத்தார் இனப் பிரச்சினை என்று ஒன்றில்லை, பயங்கரவாதப் பிரச்சினை உண்டு என்றவருக்கு இது சம்பந்தமான பொறுப்பைத் தாமே ஏற்பதற்கு எப்படி மனம் வரும்?

ஆதனால், இனப்பிரச்சினை சம்பந்தமான விவகாரத்தைக் கையாளும் பொறுப்பை தனது செல்லப் பிள்ளையான காமினியிடமும், அவரது புதிய தோழன் தொண்டமானிடமும் ஒப்படைத்திருக்கிறார்.

உங்களுடைய தந்திரங்கள், வல்லமைகளைப் பயன்படுத்தி

**உதயகாந்தன்**

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதில் அரசுக்கும் அதிக அக்கறை உண்டு என்பதனைக் காட்டி சிறுபான்மையினரின் வாக்குகளைத் திரட்டித்தாருங்கள் என்று அந்த இரட்டையர்களுக்கு கடமை ஒதுக்கீடு (Assignment) கொடுத்துள்ளாராம். விஜேதுங்கா!

### கீரியும் பாம்பும் இரட்டையராகினர்

1977 [illegible] லில் கீரியும் பாம்புமாக நின்ற காமினியும் தொண்டாவும், ஜே. ஆர். அரசில் இருவரும் அமைச்சர்களாக இருந்த காலத்தில் எதிரும் புதிருமாக இருந்த காமினியும் தொண்டமானும் (பிரேமதாஸா காலத்தில் அவரது கையாள் என்று தொண்டாவை வர்ணித்தவர் காமினி) இப்போது இணைபிரியா இரட்டையர்களாகி விட்டனர். அது வேறு கதை.

இனப்பிரச்சினைக்கு ஐக்கிய தேசியக் கட்சி உகந்த தீர்வைக் காணும் என்று தமிழர்களை நம்பச் செய்வதற்காகத்தான் தொண்டமானையும் காமினியுடன் சேர்ந்து விட்டார் டி. பி. அதன் பொருட்டே தொண்டாவுடன் கொண்டிருந்த பகைமையைக் களைந்து எறிந்து, அவரை ஆரத்தழுவி ''மன்னிப்புக்'' கேட்டார் டி. பி. யார். அதுவும் காமினியின் ஆலோசனையின் பெயரில் தானாம்!

இனப்பிரச்சினை விவகாரத்தை தனது கையில் தந்து விட்டாரே என்ற டஞக்கத்தில்— மகிழ்ச்சியில் அதனைச் செய்து முடிக்க தலைதெறிக்க அங்கும் இங்கும் என்றும் ஓடித்திரிகிறார் தொண்டா! சோழியன் குடும்பி சும்மா ஆடாது.

தொண்டமான் என்ன கீதை தந்த கண்ணனா? பலன் எதிர்பாராமல் பணி புரிவதற்கு.

தம்மிடம் ஒப்படைத்த பொறுப்பை இந்தியாவின் உதவியுடனும், அனுசரணையுடனும் செய்து முடிக்கவே இரட்டையர்கள் விரும்புகிறார்கள் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் உள்ளதைவிட தமிழர்களுக்கு அதிகமாகவே கொடுக்க வேண்டும் என்று தொண்டமான் காமினியிடம் கூறியதாகவும் அது சம்பந்தமாகத் தான் நிலைமையைச் சரிக்கட்டலாம், டி. பியை இணங்கச் செய்யலாம் என்று காமினி கூறியிருக்கிறார் என்று நம்பிக்கையாக அறியவருகிறது.

அந்தத் துணிவுடன் தான், தொண்டமான், முஸ்லிம் காங்கிரஸ் அஷ்ரப்புடன் பேசி ஒரு திட்டத்தைத் தயாரித்து, டி. பி. யாரிடம் ஒப்படைத்திருக்கிறார்.

### றோவின் பங்கு

இதேவேளை காமினியும் தொண்டமானும் இணைந்து செயற்படுவதால் ''றோ''வும் இதில் சம்பந்தப்பட்டிருப்பதாக கொழும்புப் பத்திரிகைகள் பரபரப்பான செய்திகளை எழுதுகின்றன

அவற்றில் உண்மை இல்லாமல் இருக்காது என்று நம்ப இடமுண்டு. ஜனாதிபதியின் ஆலோசகராக வந்துள்ள கலாநிதி விக்கிரம வீரசூரியாவே ஜனாதிபதி தேர்தலுக்கான ஐ. தே. கட்சிக்கான மூலோபாயங்களை வகுத்து வருகிறார்.

இந்தியாவின் ''றோ'' தேர்தல் விவகாரத்தில் தலையிட்டால் எதிரணிக்கு வெற்றி வாய்ப்புக் குறையும் என்று யாழ்ப்பாணத்து நண்பர் ஒருவரிடம் அவர் கூறியிருக்கிறார். அதன் அர்த்தம் என்னவாக இருக்கும்.

வடக்கு - கிழக்கு இனப் பிரச்சினையை முதன்மைப் படுத்தியே எதிரணி தென் மாகாண சபைத் தேர்தலில் வென்றது. அதே பாணியில் ஜனாதிபதி தேர்தலில் வெல்ல முடியாது. அதற்கேற்றால் போல ஆளுங்கட்சியின் தேர்தல் பிரசாரத்தை வகுக்கிறோம் — என்றும் கலாநிதி வீரசூரியா கூறியிருக்கிறார்!

தென்னிலங்கையைப் பொறுத்த வரையில் ஐ. தே. கவுக்கு 43 சதவீத வாக்கு அடித்தளம் உண்டு! இன்னும் 7 சத வீதத்தையே தேட வேண்டி உள்ளது என்ற கணக்கை மனதில் வைத்தே அவர் திட்டமிடுகிறார்; செயற்படுகிறார்.

ஸ்ரீலங்காவின் விவகாரங்களில், இனப்பிரச்சினை சம்பந்தமாக மட்டுமே இந்தியா அக்கறை காட்டுவதாக எண்ணி விடக்கூடாது. ஜனாதிபதி, பொதுத் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சியே மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்பதிலும் இந்தியா ஆர்வம் காட்டுகிறது!

### தேர்தலில் வெல்ல உதவி

டி. பி. விஜேதுங்காவையும் ஐ. தே. கட்சியையும் வெல்ல வைப்பதற்கு வெளிநாட்டு உதவி கிடைக்க இருக்கிறது. ஜனாதிபதி புதிதாக (மே நாளன்று) அறிவித்த நிவாரணத் திட்டங்கள் இந்தியாவும், அமெரிக்காவும் இரகசியமாக (உத்தியோகப் பற்றில்லாது) வழங்கும் உதவிகளைக் கொண்டே அமுல் செய்யப்பட இருக்கின்றன — என்று திறைசேரியின் உயர் அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார் தம்மோடு நெருங்கிய அதிகாரி ஒருவருக்கு

இடதுசாரிச் சிந்தனையுடைய அரசு ஒன்று ஸ்ரீலங்காவில் பதவிக்கு வரக்கூடாது என்பதில் அமெரிக்கா முழு அக்கறை கொண்டு உள்ளது. இது விடயத்தில் தனது புதிய பெரிய நண்பனான இந்தியாவையும் கையில் பிடித்திழுத்து வைத்திருக்கிறது. ஸ்ரீலங்கா தனது கட்டாயபின்னைத் தனத்துக்கு பணிந்து நடக்க வேண்டும் என்ற முந்திய ஆசை இந்தியாவுக்கு மறந்து போயிருக்கும் என்று எப்படி எதிர்பார்ப்பது எனவே உள்ளூர நல்ல புளுகத்துடன் இந்தியாவும் அமெரிக்காவுடன் கைகோர்த்திருக்கிறது தான் செய்யும் உதவிக்கு அமெரிக்காவிடம் இருந்து வர்த்தக நலன்; ஸ்ரீலங்காவிடம் இருந்து பூகோள அரசியல் நலன்.

அமெரிக்கா மட்டுமன்றி அதன் அணி சேர்ந்த ஜப்பான், தென்கொரியா மற்றும் ஐரோப்பிய சமூக நாடுகள் என்று வெளி உலகம் முழுவதும் இடதுசாரிப் போக்குள்ள சந்திரிகா ஆட்சிக்கு வருவதை விரும்பவில்லை.

மனிதாபிமானம் கலந்த திறந்த பொருளாதாரக் கொள்கையையே தாம் கடைப்பிடிக்கப் போவதாக சந்திரிகா உறுதி அளித்த போதிலும் வர்த்தக நலன் நாடும் அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகள் அதனை நம்பத் தயாரில்லை.

சந்திரிகா வெளிநாட்டுக் கொள்கையில் மாற்றம் செய்வதற்கு ஏதுவும் இருக்காது. ஆனால் அவரது தேசிய பொருளாதாரக் கொள்கையின் தாக்கம் தங்களுக்குப் பாரிதாக இருக்கும் என்று அவை அஞ்சுகின்றன. வெளிநாட்டு வங்கிகள், வர்த்தக வலய முதலீடுகள் பறிபோகலாம் என்ற பேரச்சம் அவற்றுக்கு உண்டு!

ஆகையால் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் ஐ. தே. கவுக்கு உதவுவதற்கும், தென்னிலங்கை மக்களைக் கவர நிவாரணங்களை வழங்குவதற்கு வேண்டிய நிதி உதவிகளை இரகசியமாக வழங்குவதற்கும் அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகள் முன்வந்திருக்கின்றன.

### நல்ல தருணம், ஏமாறாதிருப்போம்

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக இலங்கை அரசும், விடுதலைப்புலிகளும் ஜப்பானில் கூடி சமரசப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்— என்று ஜப்பானிடமிருந்து வந்திருக்கும் அழைப்பு ஐ. தே. கவை தேர்தலில் வெற்றி பெறச் செய்வதற்கான அம்பே!

புனர்வாழ்வுக்கு என வழங்கும் நிதி தங்கள் சரியாகப் பயன்படுத்தப்படவில்லை என்று அரசை ஜப்பான் கடிந்ததெல்லாம் இப்போது புரிகிறதல்லவா?

அரசு - புலிகள் பேச்சுக்கு உதவுவதற்கு வேறு வழிகளைக் நேரிலே முயற்சித்து வருவதும், கனடா தனது விருப்பத்தை மாற்றாதிருப்பதும் இந்தப் பின்னணியிலேயே! அமெரிக்காதான் நேரடியாக நாடகத்தில் பாத்திரம் பூணாமல், பின்னுக்கு நின்று இயக்குகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியையே மீண்டும் பதவியில் அமர்த்த வேண்டும் என்று அமெரிக்கா நினைத்துச் செயற்படும்போது தென்னிலங்கை மக்களின் சந்திரிகா அலை நின்று பிடிக்குமா?

இவற்றை எல்லாம் கணக்குப் போட்டுத்தான், சாதக பாதகங்களை எடைபோட்டுத்தான், சரி, சரி புள்ளிகளை இட்டுப் பார்த்துத்தான், தமிழர்கள் இனப்பிரச்சினைத் தீர்வு, தேர்தல்களில் பங்கு கொள்வது அல்லது வாக்களிப்பது குறித்து விவேகமாகவும், சாதுரியமாகவும், ஒரு நிலைப்பாட்டுக்கு, முடிவுக்கு வரவேண்டும்.

நல்ல தருணம் வருகிறது. எமது வெற்றிக்காகப் பயன்படுத்துவோம். ஆனால் ஏமாறாதிருக்கப் பார்த்துக் கொள்வோம்!

★

---

வேலை நிறுத்தத்தால்

## வடக்கு-கிழக்கு அகதிகளுக்கு ரூ. 30 லட்சம் விசேட உதவி

### செஞ்சிலுவை சங்கம் மூலம் கிடைக்கும்

கொழும்பு, ஜூன் 11

வடக்கு - கிழக்கு யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அடுத்த இரண்டு வாரங்களுக்குள் 30 லட்சம் ரூபா பெறுமதியான விசேட உதவிகள் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துக்குக் கிடைக்கவுள்ளன

சங்கத்தின் தலைவர் திரு. . பி அபயசிங்க சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு இத்தகவலை வெளியிட்டார்.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் ஊடாக இப் பணம் கிடைக்கவிருப்பதாகவும் அவர் கூறிப்பிட்டார்.

வடக்கு - கிழக்கில் சங்கத்தின் பணி தொடரும் என்றும் —

அங்கு பல கஷ்டங்கள் மத்தியிலும் பணிபுரிந்து வரும் அதிகாரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் உண்மையற்றவை என்றும் அவர் கூறினார் (இ-எ-6)

## பொருளாதாரம்....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் இதயம் கிராமங்களாகும். நாட்டின் வளங்கள் கிராமங்களிலேயே குவிந்து கிடக்கின்றன இவ்வளங்கள் சரிவரப் பயன்படுத்தப்பட வேண்டுமாயின் கிராம மக்களின் வாழ்வு ஒளிமயமாக வேண்டும்.

''இக் கிராமமக்கள் பெறும் எழுச்சியின் ஊடாகவே உறங்கிக் கிடக்கும் கிராமிய வளங்கள் எழுச்சி பெற முடியும்'' என்ற இலட்சியத்துடன் தான் விடுதலைப்புலிகளின் மாவட்ட அரசியல் துறையினர் இக்கிராமியப் பாசறைகளை நடத்தி வருகின்றனர்

'தமிழீழத்தின் வளங்கள் யாவும் தமிழீழக் கிராமங்களிலேயே சிதறிக் கிடக்கின்றன எமது தேசத்தின் இக் கிராமங்களில் கூட முயற்சியுடன் குனிந்து பார்த்தால் கோடி பொன் பூமியில் புதைந்து கிடப்பது புரியும்''— என்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் நேட்ட தெளிவாகக் கூறியிருக்கின்றனர்.

விடுதலைப் போராட்டத்துக்கு வீரர்களை உருவாக்கும் 'பாசறைகள்' போன்று — பொருளாதார சுதந்திரத்தை அடைய இக்கிராமியப்பாசறைகள் தமிழினத்துக்கு நிச்சயம் உதவும் என்பதில் ஐயமே இல்லை. ★

## அம்பாறையில் மோதல் பொலிஸார் பலி

யாழ்ப்பாணம், ஜூன் 12

அம்பாறையின் கிழக்கு பகுதியில் ஸ்ரீலங்கா பொலிஸாருக்கும், புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் பொலிஸார் ஒருவர் கொல்லப்பட்டார் என பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் தெரிவித்தது. (இ-ச)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 12

வலிகாமம் கோட்ட கிராமிய உற்பத்திக்குழுக்களுக்கு இடையிலான மாதாந்த கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெறும் வலிகாமம் கோட்டத்திற்கு உட்பட்ட அனைத்து உற்பத்திக்குழு உறுப்பினர்களையும் சமுகமளிக்குமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுள்ளது.(ஒ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நவாலி வடக்கு, மானிப்பாய்

# அட்டகிரி முருகன் தேவஸ்தானம் மகோற்சவ விஞ்ஞாபனம்

முருகன் அடியார்களே!

நவாலி அட்டகிரி முருகன் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் இன்று 2-06-1994 கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, 11ஆவது நாள் இரதோற்சவமும், 12ஆவது நாள் தீர்த்தோற்சவமும் இடம் பெறும். அடியவர்கள் அனைவரும் உற்சவங்களில் கலந்து, எம்பெருமானின் அனுக்கிரகத்தை பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

12 – 06 – 94 ஞாயிறு கொடியேற்றம் காலை 11மணிக்கு

22 – 06 – 94 புதன் இரதோற்சவம் காலை 10மணிக்கு தேரில் சுவாமி ஆரோகணிப்பார்

23 – 06 – 94 வியாழன் தீர்த்தோற்சவம் காலை 10 மணிக்கு தீர்த்தம் ஆடுதல்

- தர்மகர்த்தாசபை.

- வழிபடுவோர் சங்கம்.

நவாலி அட்டகிரி முருகன் தேவஸ்தானம்

அன்பளிப்பு:

முதலாம் திருவிழா உபயகாரர்

[31366]

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராசதுரை பத்மாவதி

திருமதி பத்மாவதி காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற இராசதுரை அவர்களின் அன்பு மனைவியும், நவநாதன் அவர்களின் அருமைச் சகோதரியும், பத்மநாதன் (இலங்கை மின்சார சபை, யாழ்ப்பாணம்), இராசசிங்கம் (ஜேர்மனி), செல்லத்துரை (விஜிதா மில் உரிமையாளர்), ஸ்ரீராதாகிருஷ்ணன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், மனோன்மணி, யோகராணி (ஜேர்மனி), கமலாம்பிகை, யோகம்மா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், அனுசா, அனுராஜ், சாந்தராஜ், கவிதா, பிரமிளா, மயூரன், ரஜிதா, கிரிதரன், நிஷாந்தினி (ஜேர்மனி), தனேஸ்குமார், விஜிதா, சதீஸ்குமார், பிரகாஸ்குமார், தர்ஷிகா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 12.06 94. ஞாயிற்றுக் கிழமை பி. ப. 4.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:-
இ. பத்மநாதன்
இ. செல்லத்துரை
(மக்கள்)

24/1, விதானையார் வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

(31374)

### குமாரசாமிப்பிள்ளை குருசுவாமி

கொக்குவில் மேற்கு சிவஞானவாருதி குமாரசாமிப் பிள்ளை குருசுவாமி 10 - 06 – 94 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் கொழும்பு அரசமொழி திணைக்களத்தில் Official Lang. Dept.. Research Officer ஆகக் கடமையாற்றியவரும், காலஞ்சென்ற சைவப் புலவர்மணி த. குமாரசாமிப்பிள்ளை — சிவபாக்கியம் தம்பதிகளின் ஏக புத்திரனும், தில்லைநாயகியின் அன்புக் கணவரும். சுரேந்திரன் (வர்த்தக வங்கி, கொழும்பு), பவனி (கொழும்பு வளாக மாணவி), செல்வேந்திரன் (கட்டுப்பத்தை பொறியியல் மாணவன்), ஜனனி (சென்ற். பிறிஜெட்ஸ் மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும், இளைப்பாறிய ஆசிரியர் ஆறுமுகம், மங்கையர்க்கரசி தம்பதிகளின் அன்பு மருமகனும், தையல்நாயகி, மாலா, செந்திநாதன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், தெய்வரஞ்சினியின் சகலனும், துவாரகன், ஆரணியின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமச்சடங்குகள் கொழும்பில் நேற்று நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
மு. ஆறுமுகம்
(மாமன்)

அராலி வடக்கு,
(31375)

### பேதுறு கபிரியேற்பிள்ளை

நாரந்தனை தெற்கைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட பேதுறு கபிரியேற்பிள்ளை 11-06-1994 இல் காலமானார்.

இவர் திரேசம்மாவின் அன்புக் கணவரும், யேசுதாசன் (இத்தாலி), சாள்ஸ் பாஸ்கரன் (இத்தாலி), பேட்றம் டோமினிக் (இத்தாலி), பரிய இராஜேஸ்வரி பாலசிங்கம் (ஆசிரியை, மானிப்பாய் இந்துக்கல்லூரி), அருட்திரு அருள்நேசன் (உதவிப் பங்குத்தந்தை, யாழ். புனித மரியன்னை பேராலயம்), மேரி சந்திரபூபதி (இத்தாலி) ஆகியோரின் அருமைத் தந்தையும், மேரி (இத்தாலி), யோகேஸ்வரி (இத்தாலி), சந்திரகுமாரி (இத்தாலி), பாலசிங்கம் (வெளிக்கள உத்தியோகத்தர் இலங்கை மின்சார சபை, கட்டுக்கோட்டை) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற பத்தினாதர், பாவிலுப்பிள்ளை, தோமஸ் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இந்துக்கல்லூரி ஒழுங்கை மானிப்பாயிலுள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து இன்று (12 06-1994) பிற்பகல் 3.00 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெறும் இரங்கற் திருப்பலியைத் தொடர்ந்து புனித மரியன்னை பேராலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
அருட்திரு அருள் நேசன்
(உதவிப் பங்குத் தந்தை)

புனித மரியன்னை பேராலயம்,
யாழ்ப்பாணம்.

(31376)

## ஆலயங்களில்

யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ். நீராவியடி ஸ்ரீ ஜெய வீரசக்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் நாளை திங்கட்கிழமை காலை 8 மணிக்கு சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறும்.

எதிர்வரும் 23 ஆம் திகதி வரை தொடர்ந்து காலை 9 மணிக்கு ஸ்நபனா அபிஷேகமும் மாலை 4 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் சுவாமி வெளிவீதி உலா வருதலும் இடம்பெறும். (ஒ-163)

★ ★ ★

வட்டுக்கிழக்கு துறட்டிப்பனை ஸ்ரீ முத்துமாரிஅம்பாள் ஆலய மஹோற்சவம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, பதினொரு தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 22 ஆம் திகதி தேர்த்திருவிழா ஆகும். உற்சவ நாட்களில் இரவு 8மணி முதல் 9 மணிவரை பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா தெய்வீக இசைச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (ஒ)

★ ★ ★

வலிகாமம் தெற்கு, ஜூன் 12

சந்தரோடை அருளானந்தப் பிள்ளையார் தேவஸ்தான பஞ்சமுக விநாயகர் பஞ்ச குண்ட பட்ச மகா கும்பாபிஷேகம் இன்று ஞாயிறு பகல் 11 மணியளவில் நடைபெற உள்ளது. மாலை விசேட பூசைகளுடன் விநாயகப் பெருமான் திருவீதி உலாவருவார். கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து பன்னிரண்டு நாட்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெறும். (சு-152)

★ ★ ★

ஆனைக்கோட்டை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகர் கோயிலின் வருடாந்த 1008 சங்காபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

மாலை 6. 00 மணிக்கு விநாயகப்பெருமான் மணவாளக் கோலத் திருவிழாவும், கான மூர்த்தி பாஞ்சமூர்த்தியின் நாதஸ்வரக் கச்சேரியும் நடைபெறும். (க-30)

★ ★ ★

கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் நாளை பகல் சங்காபிஷேகம் நடைபெற்று மாலை 7மணிக்கு சுவாமி கிராம வீதியுலா வருதல் இடம்பெறும்.

★ ★ ★

சாவகச்சேரி நுணாவில் கிழக்கு வைரவர் தேவஸ்தான வருடாந்த இலட்சார்ச்சனை இன்று ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும் உற்சவ காலத்தில் தினமும் சமயப் பெரியார்களால் திருவருள் சொற்பொழிவுகள் நடத்தப்படும். (உ-117)

★ ★ ★

மீசாலை கரும்பிமாவடி கந்தசுவாமி கோயில் மஹா கும்பாபிஷேகம் இன்று காலை 8 மணிக்கு நடைபெறும். (உ-31)

★ ★ ★

கொழும்புத்துறை, ஜூன் 12

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த முதலாம் திகதி ஆரம்பமாகிம் தொடர்ந்து விசேடபூசை ஆராதனைகள் வழிபாட்டுடன் நடைபெறுகிறது.

இன்று 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி. ப. 5.00 மணிக்கு திருப்பலியை தொடர்ந்து நற்கருணை ஆராதனையும் பவனியும் நடைபெறும்.

நாளை திங்கட்கிழமை காலை 6 மணிக்கு யாழ் ஆயர் திருநாட் திருப்பலியை தொடர்ந்து புனிதரின் தேர் பவனியும் ஆசீர்வாதமும் இடம்பெறும்.

பாஷையூரைச் சேர்ந்த சில வர்த்தகர்களினால் நான்காவது வருட உபயமாக ஆலயத்தில் அன்னதானம் வழங்கப்படும் (க-30)

★ ★ ★

புலோலி தெற்கு வெள்ளுருவை நின்றத்தாய்ப் பிள்ளையார் கோயில் மகா கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறும். (க)

★ ★ ★

தாளையடி புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 4 ஆம் திகதி சனிக்கிழமை மாலை ஆரம்பமாகி 9 தினங்கள் விசேட பூசை ஆராதனைகள் வழிபாட்டுடன் இடம்பெற்று வருகிறது.

ஆலயப்பங்குத்தந்தை அருட்திரு. எம். எக்ஸ். கருணாரத்தினம் தலைமையில் 13 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7. 00 மணிக்கு திருநாட் திருப்பலியைத் தொடர்ந்து புனித அந்தோனியார் தேர் பவனியும் ஆசீர்வாதமும் நடைபெறும். (க-33)

## விளையாட்டு நிகழ்வுகள்

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் ''உதயன்'' கிண்ணத்திற்காக கழக மைதானத்தில் — ஏழு பேர் கொண்ட அணிகளுக்கு இடையில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் — இன்றும், நாளையும் மாலையில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

இன்று

★ 4.00 மணி:- யாழ்ப்பாணம் பாரதி வி. க. அணி எதிர் ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் 'ஏ' அணி.

★ 4.45 மணி:- மனோகரா வி.க.அணி எதிர் சென்.அன்ரனீஸ் வி. க. அணி.

நாளை

★ 4.00 மணி:- யங் ஹென்றீஸ் வி.க. அணி எதிர் றேஞ்சர்ஸ் வி.க. அணி.

★ 4.45 மணி:- ஞானமுருகன் வி.க.எதிர் சுடரொளி வி. க.

★ ★ ★

ஈ. எஸ். பேரம்பலம் சகநிறுவனத்தின் ஆதரவில் யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று காலை 9 மணி முதல் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

40 ஓவர்களைக் கொண்ட இந்த இறுதியாட்டத்தில் யாழ். சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து யாழ். ஜொனியன்ஸ் அணி மோதவுள்ளது.

யாழ் மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம், யாழ்: வை.எம்.சி. ஏ. ஆகியவற்றின் தலைவரும் கைதடி நவீகட் பாடசாலை, யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி ஆகியவற்றின் முகாமையாளருமான டாக்டர் ரி. டபிள்யூ. ஜெயகுலராஜா இன்றைய இறுதியாட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். திருமதி ஜெயகுலராஜா வெற்றி பெற்றோருக்கு பரிசில்களை வழங்குவார்.

இந்தச் சுற்றுப் போட்டியில் வடக்கில் உள்ள 16 பிரபல கழக அணிகள் பங்குபற்றின என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## வெடி விபத்தில் பெண் போராளி வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஜூன்.12

கடந்த வியாழக்கிழமை அதிகாலை 4 45 மணியளவில் யாழ் மாவட்டத்தில் இடம்பெற்ற எதிர்பாராத வெடி விபத்தில் பெண் போராளியான வீரவேங்கை நிரோஜா (ஐயாத்துரை நளாயினி - தெல்லிப்பழை) வீரச்சாவடைந்தார். (இ)

## பாடசாலைகளில்

வடமராட்சி, ஜூன் 12

பருத்தித்துறை கல்விக் கோட்ட மெய்வல்லுநர் போட்டி நாளை திங்கட்கிழமை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி வசந்தன் விளையாட்டரங்கில் நடைபெறும்.

பருத்தித்துறை கல்விக் கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. வே.தி. செல்வரத்தினம் தலைமையில் நடைபெறும். இப்போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலர் திரு ஆ. சிவசுவாமி முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார். (க-173)

## நாளை

குருநகர், ஜூன் 12

யாழ். திருமறைக் கலாமன்றம் சாலையடி புனித அந்தோனியார் திருநாளை ஒட்டி ஆலய முன்றிலில் நாளை திங்கள் இரவு 8 மணிக்கு ''நெஞ்சக்கனல்'' சத்தியத்தின் தரிசனங்கள் ஆகிய நாடகங்களை மேடையேற்ற உள்ளது. (ஒ – 51)

★ ★ ★

நீர்வேலி, ஜூன் 12

நீர்வேலி காமாட்சியம்பாள் சனமூக நிலையத்தில் நாளை திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு நூல்நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளது.

மேற்படி நிலைய மேல்மாடியில்இயங்கவுள்ள இந்நூல் நிலையத்தினூடாக வாசகர்களுக்குப் புத்தகங்கள் இரவலாக எடுத்து வாங்கவும் ஏற்பாடு செய்யப்படுவதாக நிலையத் தலைவர் திரு.த.பரராசசிங்கம் தெரிவித்துள்ளார். (ஒ –110)

★ ★ ★

சுவாமி விவேகானந்தரின் உலக சமயப் பெருவிழாவை ஒட்டி, நாளை திங்கட்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் சுவாமி விவேகானந்தரின் மனித நேயம் பற்றிக் கல்லூரி அதிபர் திருமதி சரஸ்வதி - ஜெயராஜாவின் தலைமையில் க. பொ. த. உயர்தர மாணவர்களின் கருத்தரங்கு ஒன்று இடம்பெறும். (க-30)

★ ★ ★

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி தமிழ்ச் சங்கம் நடத்தும் தமிழ் விழா நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

பாடசாலை சிரேஷ்ட மாணவ முதல்வன் ஸ்ரீபிரசாந்தன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் சிறப்புரைகள், கவியரங்கம், பட்டிமன்றம், கர்நாடக இசை, நாடகங்கள், பட்டிமண்டபம், மெல்லிசை ஆகியன இடம்பெறும். (க)

★ ★ ★

மெய்கண்டதேவர் ஆதீனம் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் சிறாம்பியடி கலைப்புலவர் வீதி திருவாசக மன்றத்தில் சேக்கிழார், நமிநந்தியடிகள் ஆகியோரின் குருபூசையைக் கொண்டாடவுள்ளது. (க)

## பேராசிரியர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வின் சேவையைப் பாராட்டி கடந்த ஏப்ரல் 3 ஆம் திகதி தேசியத் தலைவர் பிரபாகரன் அவருக்கு விருது வழங்கி அவரைக் கௌரவித்தார்.

'பேராசிரியர் துரைராசா அவர்கள் ஒரு தேசப் பற்றாளர். அவர் இந்த மண்ணையும் மக்களையும் ஆழமாக நேசித்தார் அவரது வாழ்க்கை இந்த மண்ணோடு இணைந்தது! மக்களோடு பிணைந்தது. அவர் இந்த மண்ணினதும் மக்களினதும் போராட்ட வாழ்வுடன் ஒன்றிணைந்து இருந்தார்! போராட்ட வாழ்வின் பளுக்களைச் சுமந்து கொண்டார்! போராடும் மக்களின் துன்பங்களைப் பகிர்ந்து கொண்டார். என்றும் பேராசிரியர் துரைராசா ஓர் எளிமையான மனிதர்; ஓர் இனிமையான மனிதர். எளிமையும் இனிமையும் இணைந்த ஒரு நல்ல மனிதர்.'

"சரிந்து கொண்டிருக்கும் எமது கல்வித்துறையை நிமிர்த்தி விட வேண்டும் என்ற இலக்கில் பேராசிரியர் துரைராசா அவர்கள் அரும்பாடுபட்டார். எத்தனையோ இடையூறுகளுக்கும் மத்தியில் துணிந்து செயலாற்றினார்.

'எதிரியின் போர் அழுத்தங்களாலும் அனர்த்தங்களாலும் யாழ்ப்பாண உயர் கல்விப் பீடம் செயலிழந்து போகாத வண்ணம் அவர் ஆற்றிய அரும் தொண்டு மிகவும் பாராட்டுக்குரியது அவரது தேசப்பற்றுக்கும் மக்கள் நேயத்திற்கும் இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.''

— இவ்வாறு தலைவர் வே. பிரபாகரனினால் பாராட்டப்பட்டு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவர் அமரர் பேராசிரியர் துரைராசா ஆவார். (உ-162)

## பொலீஸ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீதித்தடைச் சோதனை நிலையங்களை 24 மணி நேரமும் இயங்கச் செய்யாவிட்டால் வவுனியா நகருக்குள் விடுதலைப் புலிகள் ஊடுருவல் செய்ய அனுமதிப்பதாக முடியும் என்று பொலீஸ் அதிகாரிகள் நம்புவதாகவும் தஐலண்ட் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - புளொட் உறுப்பினர்கள் மோட்டார் சைக்கிள்களில் செல்வதற்கு விசேட பாஸ் வழங்குவது என்று சில சிரேஷ்ட ராணுவ மற்றும் பொலீஸ் அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர் என்று தகவலறிந்த வட்டாரங்களை மேற்கோள்காட்டி தஐலண்ட் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விசேட பாஸ்களைக் கொண்டு மோட்டார் சைக்கிளில் செல்லும் எவரையும் சோதனையிடவும் -

அவர்களின் மோட்டார் சைக்கிள்களை எந்தக் காரணத்திற்காகவும் தடுத்து வைக்கவும் பொலீஸார் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் -

இவ்விசேட பாஸ்களைக் கொண்டு செல்லும் மோட்டார் சைக்கிள் ஓட்டிகள் மோட்டார் சைக்கிள்களுக்கு லைசென்ஸ் எடுக்கத் தேவையில்லை என்றும் தஐலண்ட் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

## அதிகாலை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளனர்.

இவர்களில் யோசெப் சிலுவையின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. சில வெல்டர் தேக்கிலம்மா இடது கண் பார்வையை இழந்துள்ளார். (உ-15-162 51)

இப்பத்திரிகை [illegible] வேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 392/3 [illegible] இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# குண்டுவெடித்து 4 பேர் உடல் சிதறிப் பலி!

## மாத்தளைப் பகுதியில் சம்பவம்

கொழும்பு, ஜூன் 12

மாத்தளை — அத்த பென்டிவெவ என்னும் இடத்தில் குண்டு ஒன்று வெடித்ததினால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் உடல் சிதறிப் பலியானார்கள் என்றும் — இன்னும் ஒருவர் படுகாயமடைந்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தண்ணீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றினால் பள்ளம் ஒன்றில் இருந்த நீரை இறைக்கும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது சேற்றினுள் புதைந்து கிடந்த குண்டு வெடித்ததாக பொலீஸார் தெரிவித்தனர். (ஒ-எ)

## ஐ. ஐ. தே மு. உறுப்பினர் 10பேரின் ஆதரவு சந்திரிகாவுக்கு

கொழும்பு, ஜூன் 11

மேல்மாகாண சபையில் அங்கம் வகிக்கும் 17 ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் உறுப்பினர்களில் 10 பேர் சந்திரிகா தலைமையிலான ஆட்சிக்கு தொடர்ந்து ஆதரவு வழங்கப்போவதாக தெரிவித்துள்ளனர்.

மேல்மாகாண சபையின்சுகாதார, மகளிர் விவகார அமைச்சராக பணியாற்றிய பிரேமரத்ன குணசேகராவை ஆளுநர் எஸ். சர்வானந்தா பதவி நீக்கம் செய்ததை அடுத்து ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியில் ஏற்பட்ட பரபரப்புக்கு மத்தியில் 10 உறுப்பினர்கள் சந்திரிகா ஆட்சிக்கு தொடர்ந்து ஆதரவு வழங்க முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பதவிநீக்கம் செய்யப்பட்ட திரு பிரேமரத்ன குணசேகரா காமினி திஸநாயக்காவின் நெருங்கிய சகா என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## ஆளுநர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்துள்ளது. இந்த நிறுவனத்தால் இலங்கை வங்கியிடமிருந்து 9 கோடி ரூபா 'ஓவர்ட்ராப்ட்' பெறப்பட்டுள்ளது.

அரசின் ஒரேயொரு குறிக்கோள் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் கீழுள்ள மேல் மாகாண சபையின் ஆட்சியைக் கைப்பற்றிக்கொள்வதே ஆகும் எனவும் அவர் குறிப்பிட்டார். (இ-க-6)

## ஆழ்ந்த கவலை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தழுவமாக மூன்று நாட்கள் துக்கதினங்களாக அனுஷ்டிக்குமாறு தமிழீழ மக்கள் அனைவரையும் விடுதலைப் புலிகள் இயக்கம் வேண்டியுள்ளது.

இந்த துக்கநாட்களில் தேசியக் கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்க விடப் படுவதுடன் அனைத்து அலுவலகங்களிலும், பொது இடங்களிலும் கறுப்புக் கொடிகளை ஏற்றி அன்னாருக்கு நினைவஞ்சலி செலுத்துமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

இறுதிநாளன்று அனைத்து வர்த்தக நிறுவனங்கள் - அலுவலகங்கள் - பாடசாலைகள் மற்றும் பொது நிறுவனங்கள் யாவற்றையும் கதவடைப்புச் செய்து மறைந்த பேராசிரியர் அவர்களுக்கு பூரண அஞ்சலி செலுத்துமாறு மக்களைக் கோருகின்றோம். அன்றைய தினத்தில் அன்னாருக்கு நினைவஞ்சலிக் கூட்டம் ஒன்றும் ஒழுங்கு செய்ய ஏற்பாடாகியுள்ளது.

பேராசிரியர் துரைராசா அவர்கள் நேற்று (11 6-94) கொழும்பில் காலமானார். அவர் கடந்த சில வாரமாக நோய் வாய்ப்பட்டிருந்தார் என்பது மக்கள் அறிந்ததே. பேராசிரியர் அவர்கள் இவ்வருடம் 'மார்ச்' 31 ஆம் திகதி யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பதவியிலிருந்து ஓய்வுபெற்று கொழும்பு திறந்த வெளிப் பல்கலைக் கழகத்தின் தலைவராகப் பொறுப்பேற்றிருந்தார்.

யாழ் பல்கலைக் கழகத்தில் சேவையாற்றிய காலத்தில் தமிழ் மக்களின் கல்வி மேம்பாட்டிற்காக அரும்பணி புரிந்தார். மிகவும் நெருக்கடியான யுத்த காலத்தில் அரச தடைகளுக்கும் மத்தியில் நாட்டுப் பற்றுடன் உயர் கல்வியின் வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய சேவை மகத்தானது. அவரது சேவையைப் பாராட்டி கல்விநிறுவனங்களும் - பொது மக்களும் பொன்னாடை போர்த்தி புகழாரம் செலுத்தியது தெரிந்ததே. எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற் போல எமது தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரன் அவர்களும் பேராசிரியரைக் கௌரவித்து - விருது வழங்கி அவரது சேவையை பாராட்டியிருந்ததும் குறிப்பிடத்தக்கது — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமரர் பேராசிரியர்

## துரைராசாவுக்கு எமது கண்ணீர் அஞ்சலி

வேந்தனே, கல்வி வேள்வியில்
வென்றவனே
நீங்கினையோ
இவ்வுலகை விட்டு,
நீங்குமா உன் நினைவு,
ஈழமெங்கும் தாங்கினையோ
எம் கல்விச் சுமையை.
உம் நினைவை
சுமக்கின்றோம்.
சுமந்தே நிற்கின்றோம்
உம் நினைவை.
வாழ்கிருக்கும் வரையில்
வாழ்வோம் உம் வழியில்.

மாணவர், ஆசிரியர், இயக்குநர்.

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி / 8456)

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தையா இரத்தினம்

திருமதி கந்தையா இரத்தினம் 11-06-1994 அன்று காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் சுழிபுரத்தை பிறப்பிடமாக கொண்டவரும் இளவாலை சித்திரமேழியை வசிப்பிடமாக கொண்டவரும் ஆவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் 12-06-1994 இன்று காலை 10 மணிக்கு பறாளாய் வீதி சுழிபுரத்திலுள்ள மார்க்கண்டு வாத்தியார் இல்லத்தில் நடைபெற்று திருவடி நிலை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:-
குணாளன்
(31377)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org